Follow us

# தமிழன்

THAMILAN

தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 42 சுபகிருது வருடம், ஆவணி மாதம் 02ஆம் திகதி வியாழக்கிழமை

(18.08.2022) ஹிஜ்ரி - 1444, முஹர்ரம் - 19 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## கொழும்பில் இன்று போராட்டம்

*நா. தினுஷா*

“ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஷக்களின் டீல் அரசாங்கத்தை தோற்கடிப்போம்” என்ற தொனிப்பொருளில் அனைத்து....

02 பக்கம்


## 24ஆம் திகதி நாடு திரும்புகிறார் கோட்டா



*யோ.தர்மராஜ்*

தாய்லாந்தில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 24ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதாக...

02 பக்கம்



## யூரியா உரம் வழங்க ஒன்லைன் பதிவு

பெரும்போகத்தில் சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்குவதற்கான ஒன்லைன் பதிவு தொடங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் www.agrarian.lk என்ற இணையதளத்தின் ஊடாக விவசாயிகள் பதிவுசெய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2022-2023 சிறுபோகம், பெரும்போகம் சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு யூரியா உரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

02 பக்கம்

# புலம்பெயர்ந்தோருக்கு விசேட அலுவலகம்

**இலங்கையில் திறக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி**

**புதிய அரசியலமைப்பு குறித்தும் விசேட கருத்து**



*நமது நிருபர்*

புலம்பெயர் அமைப்புகள் சக்தி வாய்ந்தவை, முதலீட்டு ஆதாரமாகவும் உள்ளன. அதன் பிரகாரம், புலம்பெயர்ந்தோரின் பிரச்சினைகள் மற்றும்...

02 பக்கம்

## விரைவில் உள்ளூராட்சித் தேர்தல்

உள்ளூராட்சித் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தலுக்கான பொருத்தமான தினம் ஒன்றை உறுதிப்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகிறது.

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக கால எல்லை எதிர்வரும் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

அதனடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கான அதிகாரம் குறித்த திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு முன்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெறும்.

02 பக்கம்



## மேற்பார்வை குழுக்களின் தலைமைப் பதவி வேண்டும்! கோருகிறது எதிர்க்கட்சி

*யோ.தர்மராஜ்*

நாடாளுமன்றத்திலுள்ள கோப், கோபா மற்றும் நிதிக்குழு போன்ற பிரதான குழுக்களின் தலைவர் பதவி மட்டுமல்ல, அனைத்து மேற்பார்வை குழுக்களின் தலைவர் பதவிகளையும் எதிர்க்கட்சிக்கு வழங்கவேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற முக்கிய சந்திப்புக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,...

02 பக்கம்



## சஜித் கோரும் பதவிகளை ஒருபோதும் வழங்கமுடியாது! சாகர காரியவசம் பதிலடி

*யோ.தர்மராஜ்*

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோருவது போன்று நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து குழுக்களின் தலைமைப் பதவிகளையும் அவர்களுக்கே வழங்கமுடியாது.

அவ்வாறு வழங்கவேண்டிய தேவையுமில்லையென ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளருமான சட்டத்தரணி சாகர காரியவசம் ‘தமிழன்’ நாழிதழுக்கு நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்திலுள்ள கோப், கோபா மற்றும் நிதிக்குழுவைப் போன்று மேற்பார்வை குழுக்களின் அனைத்து தலைமைப் பதவிகளையும் தங்களுக்கு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச...

02 பக்கம்

## இரு காற்றாலை மின்திட்டங்களை உருவாக்க அதானிக்கு அனுமதி

*யோ.தர்மராஜ்*

மன்னார் மற்றும் பூநகரி ஆகிய இடங்களில் இரு காற்றாலை மின் திட்டங்களை உருவாக்குவதற்கு இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதற்கான முதலீடாக 500 மில்லியன் டொலர்களை...

02 பக்கம்

## ஆளுநர் நியமனம் தொடர்பில் ஐ.தே.க. – பெரமுன முறுகல்

ஒன்பது மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்களை நியமிப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே...

02 பக்கம்

## நெருக்கடியில் உதவிய ஒரே நாடு இந்தியா

**வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கர் தெரிவிப்பு**

“இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியத்தை சமாளிப்பதற்கு முன்வருவதற்கு உதவிய ஒரே அண்டை நாடு இந்தியா” - இவ்வாறு இந்திய...

02 பக்கம்

## ஜனாதிபதி மாளிகையில் தொலைந்த பொருட்கள்

**முழுமையான விபரங்கள் தொல்பொருள் திணைக்களத்துக்கு**

ஜனாதிபதி மாளிகையை போராட்டக்காரர்கள் ஆக்கிரமித்திருந்தபோது காணாமல்போன பொருட்கள் தொடர்பான முழுமையான விபரங்கள் தொல்பொருள் திணைக்களத்துக்கு...


02 பக்கம்

## ரணில் - பெசில் இன்று சந்திப்பு

*யோ.தர்மராஜ்*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷவுக்கும் இடையில்...

02 பக்கம்




### கமெண்ட் கந்தர்..

கருணாவை பிரிச்சு கொழும்புக்கு கூட்டிவந்ததுபோல..

டயஸ்போராவுக்கும் கொழும்பில அலுவலகம் திறக்கப்போறாராம் ரணில் ஐயா... அப்படியே கே.பி ஐயாவையும் அமைச்சராக்கிவிடுவார் போல...



## இராணுவ நோக்கங்களுக்கு இலங்கையில் அனுமதியில்லை!

**சீனக் கப்பல் தொடர்பில் ஜனாதிபதி கருத்து**


ஹம்பாந்தோட்டையின் தெற்கு துறைமுகத்தை இராணுவ நோக்கங்களுக்காக சீனா பயன்படுத்த அனுமதிக்கப்படாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ‘யோமியுரி ஷிம்பன்’ எனும் ஜப்பானிய பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

2017ஆம் ஆண்டு கடனுக்கான மாற்றாக பெய்ஜிங் 99 வருட குத்தகைக்கு எடுத்துக் கொண்ட ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில்...

02 பக்கம்



### உஷ்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொள்ளும் பயணங்களுக்கான செலவுகளை அரசாங்கமே ஏற்பதாகக் கூறி ஜனாதிபதியிடம் செமையாக வாங்கிக்கட்டிக்கொண்டாராம் அமைச்சர் பந்துல குணவர்தன.

“கோட்டா அவரின் தனிப்பட்ட நிதியினை செலவிடுகிறார். நீங்கள் இப்படி கூறியிருப்பதால் அரச பணத்தை நாங்கள் துஷ்பிரயோகம் செய்கிறோம்.. என்ற கருத்து மக்கள் மத்தியில் வரும். எனவே அவற்றை வாபஸ் பெறுங்கள்..” என்று தொலைபேசியில் கூறினாராம் ரணில்.

இதனையடுத்தே கோட்டா தனது சொந்தப்பணத்தை செலவிடுவதாகக் கூறி அறிக்கையொன்றை விட்டதாம் அரச தகவல் திணைக்களம்.

## புலம்பெயர்ந்தோருக்கு...

வாய்ப்புகள் குறித்து ஆராயும் வகையில் இங்கு புலம்பெயர்ந்தோருக்கான அலுவலகம் ஒன்றை உள்நாட்டில் நிறுவுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் ஊடாக புதிய முறையை நோக்கிப் பயணிக்க முடியும் எனத் தெரிவித்த அவர், புதிய அரசியலமைப்பை நோக்கிச் சென்று இனங்களுக்கிடையிலுள்ள பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு, சினமன் லேக்சைட் ஹோட்டலில் நேற்று முன்தினம் (16) பிற்பகல் நடைபெற்ற "தொழில் வல்லுநர்கள் சங்கங்களின் சம்மேளனம் ஏற்பாடுசெய்த - 2022" விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

இன்று இந்த இடத்தில் தொழில் வல்லுநர்களுக்கு விருது வழங்கும்போது ஒரு துறை மறக்கப்பட்டுள்ளது. அதுதான் அரசியல் துறை. இருப்பினும், அரசியல்வாதிகளுக்கு விருது வழங்க உங்களுக்கு விருப்பம் இல்லை என்று நினைக்கிறேன். அது நியாயமானது. எங்களுக்குள் முரண்பட்ட கருத்துகள் இருந்தாலும், சில அம்சங்களில் நாம் உடன்படலாம். சில அம்சங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், தொழில் வல்லுநர்களாகிய நீங்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கும் சமூகத்திற்கும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளீர்கள்.

நாடு இதுவரை சந்தித்திராத மிகவும் ஆபத்தான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டே இன்று இந்த விருது வழங்கும் விழாவில் பங்கேற்கிறோம். 2017ஆம் ஆண்டில் நமது பொருளாதாரம் வளமாக இருந்தது. ஆனால், பல்வேறு விடயங்களால் அது பாதிக்கப்பட்டது. 52 நாள் அரசாங்க காலத்தின் அந்த இடைவெளி, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் தாக்கம், 2019 அரசியல் மற்றும் பொருளாதார காரணங்களால் வரி குறைப்பு மற்றும் 2020இல் கொரோனா பெருந்தொற்று உள்ளிட்ட காரணங்கள், இரசாயன உரங்களின் இறக்குமதியை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட முடிவு மற்றும் செயற்கையாக பணமாற்று விகிதத்தை கட்டுப்படுத்தியதால், இலங்கை நெருக்கடியான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நிலைமை மோசமடைந்தது. அந்த பொருளாதார நெருக்கடி அரசியல் போராட்டமாக மாறியது. ஆரம்பத்தில் இதில் இளைஞர் சமுதாயம் கலந்துகொண்டது. பின்னர் நடுத்தர வர்க்கத்தினரும் இதில் இணைந்தனர். அதன் பிறகு வன்முறையில் ஈடுபட்ட கடும்போக்கு வாதிகள் போராட்டத்தில் ஈடுபட்டு, இளைஞர் சமுதாயத்தை அதிலிருந்து அகற்றினர்.

இதுபோன்ற இரண்டு போராட்டங்களை நாங்கள் அனுபவித்தோம். இரண்டாவது போராட்டத்தின் இலக்கு அரச நிறுவனங்களை முடக்குவதும், அரச இயக்கத்தை முழுமையாக வீழ்த்துவதுமாகும்.

நாங்கள் சட்டத்தை ஸ்தாபித்து நாடாளுமன்றத்தை அதிலிருந்து விடுவித்தோம். இப்போது நாம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் காலகட்டத்தை கடந்து வருகிறோம். நாங்கள் மீண்டும் இயல்புநிலைக்குத் திரும்பிவருகிறோம். நிலைமை, கிட்டத்தட்ட இயல்புநிலைக்கு திரும்பியுள்ளது. நான் மீண்டும் அவசரநிலையை நீடிக்க மாட்டேன். இந்த வார இறுதியில் அவசரநிலையை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்று நினைக்கிறேன். ஆனால், அது மட்டும் போதாது. நாம் 2019 - 2020 காலப்பகுதிக்கு பின்னோக்கித் திரும்ப முடியாது. நமது அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் இந்த நாட்டுக்கு எதிர்காலம் உண்டு. இல்லையெனில், நாம் மற்றொரு லெபனானாக மாறுவோம்.

பொருளாதாரம் எவ்வளவு மோசமாக உள்ளது என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. நான் நிதியமைச்சராக பதவியேற்றதும் அந்நியச் செலாவணியில் இலங்கைக் குடியரசை விட நான் பணக்காரன் என்பதை உணர்ந்துகொண்டேன். என் வீட்டில் ஆயிரம் டொலர்கள் சேமிப்பில் உள்ளன. அதன்படி, நான் குடியரசைவிட ஆயிரம் மடங்கு பணக்காரன். சஞ்சீவ் கார்டினர் போன்றவர்கள் இந்த குடியரசை விட பல கோடி மடங்கு பணக்காரர்கள். அதுதான் யதார்த்தம்.

இப்போது நாம் கடினமான காலத்தைக் கடந்து சென்றுகொண்டிருக்கிறோம். அதிர்ஷ்டவசமாக, எங்கள் தேவைகளுக்குச் செலுத்த இரண்டு அல்லது மூன்று மில்லியன் டொலர்களைத் தேட வேண்டியிருந்த காலத்தை கடந்துவிட்டோம். ஆனால், நாம் இன்னும் நெருக்கடியை வெற்றிகொள்ளவில்லை. இறக்குமதியில் தங்கியிருக்கும் பொருளாதாரமாக நாம் தொடர்ந்து பயணிக்க முடியாது. தற்போது நமது வர்த்தக் கையிறுப்பு நமக்கு சாதகமாக இல்லை.

எனவே, இப்போது நாம் என்ன செய்யவேண்டும், பொருளாதார ஸ்திரத்தன்மையொன்றை உருவாக்க வேண்டும். நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். பணிக்குழாம் இணக்கப்பாட்டிற்கு இறுதி நிபந்தனைகளைத் தயாரிப்பதற்கு இப்போது இரண்டு குழுக்கள் உள்ளன. கடன் பெக்கேஜொன்றை வழங்க திட்டமிட்டு சீனக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூடுதல் நிதி உதவி வழங்கவும் தயாராகியுள்ளது. இந்த இலக்குகளை எவ்வாறு அடைவது என்பது குறித்து நாம் ஜப்பானுடன் கலந்துரையாடினோம். நாங்கள் ஏற்கனவே இந்தியாவுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பித்துள்ளோம்.

நாம் விரைவாக செயல்பட்டால், இந்த நெருக்கடி குறுகிய காலமே நீடிக்கும். ஆனால், நாம் தொடர்ந்து விவாதித்துக்கொண்டிருந்தால், அனைவரும் துன்பப்படவேண்டி ஏற்படும். நாம் மீண்டும் பழைய அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது பழைய முறையை கொண்டு வருவதற்காகவா என்பதுதான் கேள்வி.

முதலில் 22ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவோம். நீங்களும் நானும் அதனை ஆதரிப்பதை நான் அறிவேன், அதன்பின்னர் நாடாளுமன்றத்தை அரசாங்கமாக மாற்ற நாம் முயற்சிப்போம். துறைசார் மேற்பார்வைக் குழு, தேசிய சபை, மேற்பார்வை நிறைவேற்றுக் குழு ஆகியவற்றில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் பங்கேற்க முடியாது.

குழுக்களுக்கு ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை அழைக்கலாம். குழுத் தலைவரின் அனுமதியுடன் அவர்கள் கட்சிகளிடம் கேள்வி எழுப்பலாம். உலகில் வேறு எந்த நாட்டிலும் இளைஞர்களுக்கு துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் பங்கேற்க வாய்ப்பை வழங்கியதில்லை. இந்த நாடாளுமன்றத்தின் ஊடாக புதிய முறையை நோக்கி எமக்கு பயணிக்க முடியும்.

அதை வேறொரு குழுவிடம் ஒப்படைக்க முடியாது. இதனால் புதிய அரசியலமைப்பை நோக்கிச் செல்ல முடியும். இனங்களுக்கிடையிலுள்ள பிரச்சினையை தீர்க்க வேண்டும். 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததால் மீண்டும் நாம் யுத்தத்தில் ஈடுபட வேண்டியதில்லை.

புலம்பெயர் சமூகத்தை நாம் பார்க்க வேண்டும். அவை சக்திவாய்ந்தவை போன்று முதலீட்டு ஆதாரமாகவும் உள்ளது. அதன் பிரகாரம், புலம்பெயர்ந்தோரின் பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புகள் குறித்து ஆராயும் வகையில் இங்கு புலம்பெயர்ந்தோருக்கான அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கு நான் தீர்மானித்தேன்.

நான்காவது தொழில் புரட்சிக்கு நாம் இப்போது தயாராக வேண்டும். பணம் சம்பாதிப்பதற்கான வழிகளைக் கண்டறிய அதைப் பயன்படுத்தலாம். ஆனால், நமது பொருளாதாரம் முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும். அரச துறை வீழ்ச்சியடையும்போது, கல்வி, சுகாதாரம், வீடு போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நம்மிடம் பணம் இருக்க வேண்டும்.

நமது தேர்தல் முறைமைகள் குறித்தும் சிந்திக்க வேண்டும். விருப்பு வாக்கு முறைமையானது வாக்களிப்பு முறைமைக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நாடாளுமன்றத்தில் புதிய முறைமையொன்றை கொண்டுவரும் திறன் நமக்கு இருக்க வேண்டும். அதை நாம் மற்றவர்களுக்கு கொடுக்க முடியாது.

## கொழும்பில்...

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள மாபெரும் போராட்டமொன்று கொழும்பில் இன்று (18) இடம்பெறவுள்ளது.

நாடு முழுவதுமுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் அடக்குமுறையை ஒழிக்கும் நோக்கில் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த காலங்களில் இடம்பெற்ற போராட்டங்களின்போதும் காலி முகத்திடல் போராட்டக்களத்திலிருந்தும் கைதுசெய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுதலைசெய்யுமாறும் வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அனைத்து பல்கலைக்'கழகமாணவர்கள் ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், மூன்று வருடங்களுக்கு மேலாக முடக்கப்பட்டுள்ள பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கைகளை உடனடியாக மீள ஆரம்பிக்குமாறும் வலியுறுத்துவதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் போராட்டத்தின் போது இந்த விடயத்தையும் பிரதான கோரிக்கையாக வைத்து பல்வேறு கோஷங்கள் எழுப்பப்படவுள்ளன.

இதேவேளை, தற்போது ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளதாகவும், அதன் விளைவுகள் தாங்கிக்கொள்ள முடியாதளவுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம், போராட்டத்தின்போது இந்த விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படும் என தெரிவித்துள்ளது.

மேலும், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குதல், மக்களன் அதிகாரத்தைப் பாதுகாக்க புதிய அரசியலமைப்புக்காகவும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம், குருநாகல், பொலன்னறுவை, கண்டி, கேகாலை, ஹம்பாந்தோட்டை, கம்பஹா, காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி என சகல பிரதேசங்களிலுமுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதுடன் அவர்களை ஒருங்கிணைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவ நோக்கங்களுக்கு..

செவ்வாயன்று வந்த உயர்தொழில்நுட்ப சீன ஆராய்ச்சிக் கப்பலின் வருகைக்கு முன்னதாக இந்தப் பேட்டி வழங்கப்பட்டுள்ளது.

சீனாவின் பெல்ட் அண்ட் ரோட் திட்டத்தின் ஒரு பகுதியாக ஹம்பாந்தோட்டை துறைமுகம் உருவாக்கப்பட்டது, ஆனால், கடனைத் திருப்பிச் செலுத்த முடியாததால் 2017இல் துறைமுகம் சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளது .

துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, இது ஒன்றும் புதிதல்ல. அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளும் துறைமுகங்களை குத்தகைக்கு எடுத்துள்ளதாக இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தோ-பசிபிக் பகுதியில் முக்கிய போக்குவரத்து மையமாக விளங்கும் அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் இராணுவத்தளமாக மாறக்கூடும் என்று இந்தியா, அமெரிக்கா மற்றும் பிற நாடுகள் கவலை கொண்டுள்ளன. எனினும், தற்போது வந்துள்ள கப்பல் இராணுவப் பிரிவின் கீழ் வரவில்லை. இது ஓர் ஆராய்ச்சிக் கப்பல் என்ற அடிப்படையில் வந்தது. அதனால்தான் கப்பலை ஹம்பாந்தோட்டைக்கு வர அனுமதித்தோம் என்று விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

## ரணில் - பெசில்...

இன்று விசேட சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலுள்ள முக்கிய உறுப்பினர்கள் 7 பேரும் கலந்துகொள்ளவுள்ளதாக அறிய முடிந்தது.

புதிய அரசாங்கம் அமைப்பது குறித்து, எதிர்கால செயற்பாடுகள் குறித்து, அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வகிபாகம் குறித்து இந்தச் சந்திப்பின்போது ஆழமாக ஆராயப்படவுள்ளதாகவும் அறிய முடிந்தது.

## 24ஆம் திகதி..

ரஷ்யாவுக்கான முன்னாள் துதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

மிக் விமான கொடுக்கல் வாங்கல் குற்றச்சாட்டு தொடர்பிலேயே வாக்கு மூலம் வழங்குவதற்காக நேற்று குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்குச் சென்று வாக்கு மூலம் வழங்கியதன் பின்னர், வெளியில் வந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

2006ஆம் ஆண்டிலிருந்து இருக்கும் மிக் விமான கொடுக்கல் வாங்கல் குற்றச்சாட்டு தொடர்பிலேயே வாக்குமூலம் வழங்க அழைக்கப்பட்டிருந்தேன். நல்லாட்சியில் 5 வருடமும் கோட்டாபய காலத்தில் இரு வருடமும் இணைந்து 87 மாதங்கள் இது தொடர்பில் விசாரணை செய்தும் கூறிய குற்றச்சாட்டை நிரூபித்துக்கொள்ள முடியாது, தடு மாறிக்கொண்டிருக்கின்றனர்.

தற்போதும் வாக்குமூலம் வழங்கியுள்ளேன். இதற்கு முன்னரும் 10 நாட்களாக வாக்கு மூலம் வழங்கியுள்ளேன். என்னுடைய வாக்கு மூலத்திலுள்ள எந்தவொரு சாட்சியையும் நீதிமன்றத்திலும் முன்வைக்காது, நல்லாட்சி காலத்தைபோன்றே மீண்டும் பொய்களை கூறுகின்றனர். அந்த பொய்களுக்கு பதிலளிக்கவே நான் இங்கு வந்தேன்.

87 மாதங்களுக்கு முன்னெடுக்கப்படும் விசாரணைகளின்போது, மிக் விமான கொடுக்கல் வாங்கலிலிருந்து ஒரு டொலரேனும் வந்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் கூறுமாறு கூறினேன். அப்போதைய தேவைக்கு அமைய விமானப்படையே இந்த மிக் விமான கொடுக்கல் வாங்கலை முன்னெடுத்தது. நான் எவ்வித கொடுக்கல் வாங்கலையும் முன்னெடுக்கவில்லை. எனினும், இன்று எனக்கு எதிராகவே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

அப்போதைய விமானப்படைத் தளபதி, பாதுகாப்புச் செயலாளர், அதனை வழிநடத்தியவர்கள், மிக் கொடுக்கல் வாங்கலை கொண்டுவந்தவர்கள், அனுமதி வழங்கி மத்திய வங்கி அதிகாரிகள் உள்ளிட்ட 23 அதிகாரிகளுக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டும் இல்லை. அவர்கள் நல்லாட்சியிலும் தற்போதைய ஆட்சியிலும் சேவையாற்றுகின்றனர். அவர்களை விடுத்து நானே மோசடி செய்ததாக பொலிஸார் குற்றச்சாட்டுகின்றனர்.

என்னைபோன்று அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்ட பலர் இருக்கின்றனர். அவர்களுக்கு எவ்வித நீதியையும் கோட்டாபய ராஜபக்ஷ பெற்றுக்கொடுக்கவில்லை. சிலருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. அது சரியா, தவறா என எனக்குத் தெரியவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆரம்பம் மறந்துவிட்டது. அவருடைய சகோதரரை மறந்துவிட்டார். எனவே, விரைவில் இலங்கைக்கு வரவேண்டும்.

நாட்டுக்கு சேவை செய்த ஒருவர் என்பதால் அவர் நாட்டுக்கு வரவேண்டும். அவரின் அருகில் இருந்தவர்களால் அவர் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷ என்ற மனிதரிடமுள்ள குணாதிசயங்களில் துளியளவு கூட கோட்டாபயவுக்கு இல்லை. அவ்விடத்திலேயே அவருக்கு தோல்வி ஏற்பட்டது. அதனை மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

அவர் என்னுடன் பேசுவார். அவர் எதிர்வரும் 24ஆம் திகதி நாட்டுக்கு வருகின்றார். நாட்டுக்கு வந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்.

அரசியல்வாதியாக அவர் சிறந்தவர் இல்லையென்றாலும் அதிகாரியாக அவர் சிறந்தவர் - என்றார்.

## நெருக்கடியில் உதவிய...

வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் தெரிவித்துள்ளார்.

பிராந்தியம் முக்கியத்துவம் பெறுவதால், பல நாடுகள் இந்தியப் பெருங்கடலில் தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்த முயற்சிக்கின்றன என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்ஷங்கர் தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட சீன ஏவுகணை மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலான 'யுவான் வாங் 5' தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தியப் பெருங்கடல், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே மற்றொரு விசேட அம்சமாக மாறாது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா தனது தேசிய நலன்களை கவனித்துக்கொள்ள வேண்டும், ஆனால், பிராந்தியத்தில் தனித்துவத்தைக் கோர முடியாது.

இந்தியாவின் அண்டைநாடுகள் கலாசார ரீதியாக ஒன்றுபட்டுள்ளதுடன், பொருளாதார ரீதியாகவும் பிணைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியத்தை சமாளிப்பதற்கு முன்வருவதற்கு உதவிய ஒரே அண்டைநாடு இந்தியா என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## யூரியா உரம் ...

நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்கப்பட்ட அதே விலையில் அதாவது, 50 கிலோ எடை கொண்ட யூரியா மூடை 10 ஆயிரம் ரூபாவுக்கு சோள விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

## விரைவில்...

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக கால எல்லை இவ்வருடம் மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த நிலையில், அந்தக் கால எல்லை மேலும் ஒரு வருடத்துக்கு அரசாங்கத்தால் நீடிக்கப்பட்டது.

இந்நிலையில், அவற்றுக்கான தேர்தல் நடத்துவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவால் ஆராயப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி மாளிகையில்...

நேற்றுமுன்தினம் (16) அனுப்பிவைக் கப்பட்டுள்ளன.

கொழும்பில் கடந்த ஜூலை 07ஆம் திகதி கூடிய போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகை, பிரதமர் அலுவலகம், அலரி மாளிகை ஆகியவற்றை முற்றுகையிட்டனர். இதன்போது பெறுமதியான பல பொருட்கள் காணாமல்போயுள்ளதாக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஜனாதிபதி மாளிகையில் இருந்த பொருட்களின் முழுமையான விவரங்களைத் தருமாறு தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க, ஜனாதிபதியின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதனடிப்படையில் அனைத்து விவபரங்களும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதுடன் காணாமல்போன பொருட்கள் தொடர்பிலான தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இது தொடர்பில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளால் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆளுநர் நியமனம்...

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புடைய பலரை ஆளுநர்களாக நியமிக்கத் தீர்மானித்திருந்தபோதிலும், ஆளுநர் பதவிகளுக்கு தனியான பெயர்களை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி முன்வைத்துள்ளமையால் இந்தக் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்களான தயா கமகே, ஜோன் அமரதுங்க, நவீன் திஸாநாயக்க மற்றும் வடமேல் மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஷாமல் செனரத் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியினால் ஆளுநர் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தற்போது அந்தப் பதவிகளில் கடமையாற்றும் மூன்று ஆளுநர்களுக்கு அனுமதி வழங்குமாறு பொதுஜன முன்னணி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

லலித் யூ கமகே, விலி கமகே, ஏ.ஜே. முஸம்மில் ஆகியோரை ஆளுநர் பதவிகளில் பணிபுரிய அனுமதிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சஜித் கோரும்...

கோரியது குறித்து வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து குழுக்களின் தலைமைப் பதவிகளையும் தங்களுக்கே வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை மாத்திரமே விடுத்துள்ளார். அவர் கோரிக்கை விடுப்பதற்கு அமைய அனைத்து குழுக்களின் தலைமைப் பதவிகளையும் அவர்களுக்கு வழங்க முடியாது. அவ்வாறு வழங்க வேண்டிய தேவையுமில்லை.

அவர்களின் கோரிக்கைக்கமைய நிதிக்குழுவின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கியுள்ளோம். ஏனைய இரு குழுக்களான கோபா மற்றும் கோப் குழுவின் தலைமைப் பதவிகளுக்கான நியமனங்களின்போதே யாருக்கு வழங்க வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும். ஆனால், தற்போது நிதிக்குழுவின் தலைமைப் பதவியை மாத்திரமே அவர்களுக்கு வழங்கியுள்ளோம்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் கோருவது போன்று, நாடாளுமன்றத்தின் மேற்பார்வை குழுக்களின் அனைத்து தலைமைப் பதவிகளையும் அவர்களுக்கு வழங்க முடியாது. அவற்றில் அரைவாசியை அவர்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. ஆனால், அனைத்தையும் அவர்களுக்கே வழங்க வேண்டிய தேவையில்லை – என்றார்.

## இரு காற்றாலை...

தாண்டும் எனவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மன்னார் மின் நிலையத்திலிருந்து 286 மெகா வோர்ட் மின்சாரமும் புனாரி மின்நிலையத்திலிருந்து 234 மெகா வோர்ட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் முன்னேற்றம் குறித்து நேற்றுமுன்தினம் இலங்கை மின்சார சபை மற்றும் நிலையான அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கோடிபதிகளின் ஒருவராக இருக்கும் அதானி குழுமத்திற்கு வழங்கப்படும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டம் தொடர்பில் கடந்த காலங்களில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. குறிப்பாக, எரிசக்தி திட்டத்தை அதானி குழுமத்திற்கு வழங்குமாறு இந்திய பிரதமர் தனக்கு அழுத்தம் கொடுப்பதால், அதனை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழுத்தம் கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டதையடுத்தே இந்த விடயம் பெரும் சர்ச்சையாகியது.

எனினும், தற்போது மன்னார் மற்றும் பூநகரி ஆகிய இடங்களில் இரு காற்றாலை மின் திட்டங்களை உருவாக்குவதற்கு இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேற்பார்வை...

ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் நாட்டை கட்டியெழுப்புவதற்கான சர்வகட்சி ஒன்றிணைந்த வேலைத்திட்டத் திற்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. நாங்கள் இந்த ஆதரவை அமைச்சுப் பதவிகளின் ஏலத்தினால் வழங்கவில்லை. இவ்வாறான அமைச்சுப் பதவிகள் ஏலத்தை நாங்கள் முழுமையாக நிராகரிக்கின்றோம். நாட்டு மக்களின் நிலைப்பாடு எங்களுக்கு நன்றாக புரிகின்றது.

இந்நிலையில், நாடாளுமன்றத்திலுள்ள பிரதான குழுக்களான கோப், கோபா மற்றும் நிதிக்குழுவின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சிக்கு வழங்குவது குறித்து இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக எங்களுக்கு அறிய கிடைத்தது. இது மிக நல்லதொரு முடிவாகும்.

எனவே, யோசனையை நடைமுறைப்படுத்தி, நாடாளுமன்றத்திலுள்ள பிரதான குழுக்களின் தலைவர் பதவி மட்டுமல்ல, நாடாளுமன்றத்தின் அனைத்து மேற்பார்வை குழுக்களின் தலைவர் பதவிகளையும் எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களும் அதேபோன்று, எதிர்க்கட்சி பிரதிநிதித்துவப் படுத்தும் மேற்பார்வை குழுவின் தலைவர்கள், உறுப்பினர்கள், ஏனைய குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களும் இணைந்து நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களுக்கு தலைமைத்தாங்க முடியும்.

ஆனால், சிறப்புரிமைகளுக்காக நாங்கள் எங்களுடைய பொறுப்புகளை ஒருபோதும் காட்டிக்கொடுக்கமாட்டோம். அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டு செய்யும் நிபந்தனைகளுக்கமைய, நாங்கள், நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்கமாட்டோம். எவ்வித நிபந்தனைகளுமின்றி எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு சக்தியை கொடுப்போம். இதுவே, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் நிலைப்பாடாகும் - என்றார்.

# அமைச்சர் அலி சப்ரி - ஈரான் தூதுவர் சந்திப்பு



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியை ஈரான் தூதுவர் ஹஷேம் அஷ்ஜசாதே


நேற்று முன்தினம் (15) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான நீண்ட காலம் நீடித்த சுமுகமான உறவுகள் குறித்து குறிப்பிட்ட வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், இலங்கை தற்போது எதிர்நோக்கிவரும் பொருளாதார வீழ்ச்சி மற்றும் நிலைமையை ஸ்திரப்படுத்துவதற்காக அரசாங்கம் இதுவரை முன்னெடுத்துள்ள உறுதியான நடவடிக்கைகள் குறித்து தூதுவருக்கு விளக்கமளித்தார்.

இலங்கை - ஈரான் இருதரப்பு உறவின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய தூதுவர் ஹஷேம் அஷ்ஜசாதே, இலங்கைக்கான ஈரான் குடியரசின் தொடர்ச்சியான உதவிகளை உறுதியளித்தார்.

# 80 தங்க பிஸ்கட்டுகளுடன் இருவர் கைது





20கோடியே 50இலட்சம் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட் தொகையை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற்றுவதற்கு முயற்சித்த விமானப் பயணி ஒருவரும் விமான நிலை தீர்வை வரியற்ற கடைத் தொகுதியின் ஊழியர் ஒருவரும் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகளினால் நேற்று (17) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவற்றில் 09கிலோ 500கிராம் தங்க பிஸ்கட்டுகள் இருந்துள்ளன.

அவர்களில் ஒருவர் நிட்டம்புவை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயது பயணி என்றும், டுபாயிலிருந்து விமானத்தினூடாக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரின் பயணப் பொதியிலும், விமான நிலைய ஊழியர் அவரது கைப் பையிலும் 116.6 கிராம் நிறையுடைய 80 தங்க பிஸ்கட்டுகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. இந்த பிஸ்கட் தொகையுடன் விமான நிலையத்திலிருந்து தப்பித்துச் செல்ல முயற்சித்தபோது சுங்க போதைப்பொருள் கட்டுப்பாடுப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இலங்கையில் முதலீடு செய்யலாம்

## அமைச்சர் நசீர் அஹமட் அழைப்பு





(அஷ்ரப் ஏ சமத்)

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி கடந்த வாரம் டயஸ்போரா தமிழ் புலம்பெயர் தொண்டர் நிறுவனங்களின் தடையை நீங்கியிருந்தார். அதற்கமைய, இந்த அமைப்புகளை இலங்கையில் முதலிடுவதற்கும் பொருளாதாரத்துக்கு உதவுவதற்கும் வரவேற்கின்றோம்.

அதேபோன்று முஸ்லிம் சமூகத்தில், சமூகங்களுக்கு சேவை செய்யும் கல்வி, மத ரீதியாக உள்ள 11 நிறுவனங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. எனவே, அவர்களது நடவடிக்கைகளை பரிசீலித்து தடையை நீக்கும்படி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

மேலும், சர்வகட்சி அரசாங்கம் அமையுமாக இருந்தால் சர்வதேசத்திடமிருந்து எமக்கு ஆதரவை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அமைச்சில் நேற்று (17) இடம்பெற்ற அமைச்சின் புதிய திட்டங்கள், சட்ட வரைபுகள் பற்றி விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உதாரணமாக குருநாகல் பரகதெனியவிலுள்ள அரபிக் கல்லூரி 5 தசாப்தங்களாக இயங்கி வருகின்றது. இக்கல்லூரியின் நிறுவனம் முஸ்லிம் அநாதை மாணவர்களின் கல்விக்கு, பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி வசதிகளுக்கு மாதாந்தம் புலமைப்பரிசில், குடிநீர், வீடு நிர்மாணம் போன்ற திட்டங்களை கடந்த 40ஆண்டுகாலமாக செய்து வந்தன. அந்த நிறுவனத்துக்குகூட பாதுகாப்பு அமைச்சினூடாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனத்தினர் கடந்த வருடம் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்குதல் கூட செய்துள்ளனர். இவ்வாறான நிறுவனங்களுக்கு ஒரு சிலர் தமது ஸக்காத் நிதியை வழங்கி வந்தனர். அதனையே ஏழை முஸ்லிம் சிறார்கள் ஆயிரத்துக்கும் அதிகமான மாணவ மாணவிகளுக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபாவை கல்விக்காக வழங்கி வந்தனர். கடந்த 2 வருடமாக வறிய மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான நிறுவனங்களின் தடையையும் நீக்க வேண்டும் என நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

அத்துடன் சர்வகட்சி ஆட்சியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட சிறிய கட்சிகளின் தலைவர்களான ரவூப் ஹக்கீம், அதாவுல்லாஹ், ரிசாத் பதியுதீன் என அனைவரும் தற்போதைய அரசில் ஒன்றிணைந்து சர்வகட்சி ஆட்சிமுறையில் இணைந்து மிகுதியாக உள்ள இரண்டரை வருடங்களில் மக்களுக்கு செய்யக்கூடிய சேவையை செய்ய வருமாறும் ஜனாதிபதிக்கு கைகொடுக்குமாறும் அழைப்பு விடுகின்றோம்.

தற்போதைய அமைச்சுக்கள் மாற்றப்படலாம். நான் இன்று இருக்கலாம். நாளை வேறு அமைச்சர் இங்கு இருக்கலாம். ஆகவே அமைச்சுக்களின் திட்டங்கள், கொள்கைகள் நிறுவனங்கள் மாற்றப்படக் கூடாது.

சர்வகட்சி அரசாங்கம் அமையுமாயின் உலக நாடுகள் எமது நாட்டுக்கு உதவக்கூடும். ஜனாதிபதி கூட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. நாடு மற்றும் மக்கள் பொருளாதார கஷ்டத்தில் அரசியல் வேறுபாடுகளை, கொள்கைகளை ஒரு பக்கம் விட்டுவைத்துவிட்டு மக்களின் நாட்டின் பொருளாதாரம், முறை மாற்றம் என்பவற்றை கருத்தில்கொள்ளல் வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் சொல்வது போன்று நாம் மீண்டும் ஒரு நாடாளுமன்றத் தேர்தலுக்கு போவது என்பது நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள், மக்களது வாழ்க்கைச் செலவு மேலும் மோசமடையலாம். தேர்தலுக்கு போக முன் குறைந்தது ஒரு வருடமாவது ஜனாதிபதியுடன் இணைந்து செல்வது சிறந்ததாகும்.

எனது அமைச்சின் கீழ் சுற்றாடல் அதிகார சபை, புவியியல், மண் அகழ்வு நிறுவனமும் உள்ளது. அதனை திறம்படக் கொண்டு செல்வதற்கு அமைச்சின் செயலாளர் அனில் ஜயசிங்க மற்றும் அதிகார சபையின் தலைவர்கள் ஊடாக பல்வேறு திட்டங்களை ஒவ்வொரு கிழமையும் கூடி அதனை இலாபமீட்டும் நிறுவனமாகவும் மக்கள் நல்ல சேவை செய்யும் நிறுவனமாகவும் முன்னெடுத்து வருகின்றோம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# கௌரவமான அரசியல் தீர்வை கோரி இலுப்பைக்கடவையில் கவனயீர்ப்புப் போராட்டம்







(மன்னார் நகர் நிருபர்)

''கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனிப்பொருளில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100நாட்கள் நடைபெறவுள்ள செயல்திட்டத்தின் 17ஆவது நாள் கவனயீர்ப்பு போராட்டம் மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இலுப்பைக்கடவை பகுதியில் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் 100நாட்கள் நடைபெறவுள்ள செயல் திட்டத்தின் 17ஆவது நாள் போராட்டம் நேற்று (17) இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ். திலீபன் மற்றும் கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், மாணவர் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், மன்னார் மெசிடோ மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.

குறித்த செயல் திட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களால் 100 நாள் செயல்திட்டத்திற்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டது.

அதேநேரம் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை பெறுவதற்கான தெளிவுபடுத்தல்கள் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் கருத்துகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான கருத்துகளும் உள்வாங்கப்பட்டன.

குறித்த போராட்டம் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'உதிரம் கொடுப்போம்: உயிர் காப்போம்' புத்தளத்தில் இரத்ததான நிகழ்வு





(ரஸீன் ரஸ்மின்)

'உதிரம் கொடுப்போம், உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் புத்தளம் நகர சபை ஏற்பாடு செய்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று (17) புத்தளம் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் தலைமையில் இடம்பெற்ற இந்த இரத்ததான நிகழ்வில் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் உட்பட புத்தளம் நகர சபை உறுப்பினர்கள், நகர சபை ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் எனப் பலரும் மிகவும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.


புத்தளம் தள வைத்தியசாலையில் அவசர சிகிச்சை, மகப்பேற்றுப் பிரிவு மற்றும் அறுவை சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்குத் தேவையான இரத்த தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக இந்த இரத்த தானம் வழங்கப்பட்டது.

புத்தளம் தள வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்தியர் குழாம் மற்றும் ஊழியர்கள் நகர மண்டபத்திற்கு வருகைதந்து இவ்வுதிரங்களை சேகரித்துக் கொண்டனர்.

இதன்போது 77பேர் மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு தமது இரத்தத்தை தானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் கிரனைட் பதிக்கும் ஆரம்ப நிகழ்வு







(பேருவளை நிருபர்)

பேருவளை சீனன் கோட்டையில் அமைந்துள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் கிரனைட் (Granite) பதிக்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் (16) சீனன் கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் ஏ.எச்.எம். முக்தார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சீனன் கோட்டை வாழ் ஜமஅத்தினரின் பங்களிப்புடன் மேற்படி பள்ளிவாசலுக்கு கிரனைட் பதிக்கப்படுவதோடு பள்ளிவாசலை சூழவுள்ள வளாகமும் அழகான முறையில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

பள்ளிச்சங்கத் தலைவர் முக்தார் ஹாஜியார் உட்பட உறுப்பினர்கள் முதலாவது கிரனைட்டை தரையில் வைத்து அதன் பணிகளைத் தொடக்கி வைத்தனர்.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் சீனன் கோட்டை பள்ளிச்சங்க உறுப்பினருமான அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) மற்றும் பள்ளிவாசல் இமாம் மௌலவி முகத்தமுஷ் ஷாதுலி அஹமட் முபாரக் (மன்பயி) ஆகியோர் துஆப் பிரார்த்தனை நடத்தியதோடு பள்ளிச்சங்க இணைச்செயலாளர் எம்.எம்.எம் சிஹாப் ஹாஜியார், இணைப்பொருளாளர் எம்.எம் எம். ஹில்மி மௌஸூன் ஹாஜியார், உறுப்பினர் எம்.இஸட்.எம். இஸ்ஸத் ஹாஜியார் மற்றும் முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ் இப்திகார் ஜமீல், ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஊர் ஜமஅத்தார்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சீனன் கோட்டை பள்ளிச்சங்க நிர்வாகத்தின் கீழ் 6 ஜும்ஆ பள்ளிவாசல்களும் மற்றும் 10க்கு மேற்பட்ட ஸாவிய்யா மஸ்ஜிதுகளுள் சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் பாரிய இடவசதிகளுடன் பள்ளிவாசல் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# மூடப்பட்டுள்ள மன்னார் - புத்தளம் வீதியை கண்காணிக்க அதிகாரிகள் விஜயம்







(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் - புத்தளம் பாதை (எலுவன்குளம் ஊடாக) கடந்த பலவருடங்களாக மூடப்பட்டிருந்த நிலையில், அவற்றை மீளத்திறந்து மக்களின் போக்குவரத்து மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான உதவிகளை செய்யுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கப் பெற்றுள்ளது.

அண்மையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி அதன் தலைவர் ரிஷாட் பதியுதீன் தலைமையில், ஜனாதிபதியினை சந்தித்தபோது மேற்படி பாதையின் அவசியம் தொடர்பில் எடுத்துரைத்திருந்த நிலையில், இதற்கான ஆரம்ப பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று (17) எலுவன்குளம் பகுதிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், வன்னாத்தவில்லு பிரதேச செயலாளர் மற்றும் வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் கொண்ட குழுவினர் வருகை தந்திருந்தனர். மேற்படி குழுவினர் கள நடவடிக்கைகளை இங்கு மேற்கொண்டனர்.

இதன்போது, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனும் இங்கு வருகை தந்திருந்ததுடன், குறித்த பாதை தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது, அதிகாரிகளினால் எலுவன்குளம் பாலத்தின் புனரமைப்பு தொடர்பிலான வரைபடம் தயார்படுத்த போதுமான அளவீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன், மேற்படி பாலத்தில் இருந்து மறிச்சுக்கட்டி நோக்கி செல்லும் உட்பாதையில் சேதமடைந்துள்ள இரு பாலங்களை பார்வையிட அதிகாரிகள் குழுவினர் அங்கு விஜயத்தினை மேற்கொண்டனர். மேற்படி பாதையானது பல நூறு வருடங்கள் பழமை வாய்ந்தவை.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் முயற்சியால் திறந்துவைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டிருந்த நிலையில், அதன்பிற்பாடு கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசின் போது நிரந்தரமாக இப்பாதை மூடப்பட்டிருந்த நிலையில், மீண்டும் இதனை திறப்பதற்கான முன்னெடுப்புகளை ரிஷாட் எம்.பி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் தமிழ்மொழியில் பாடப்பட வேண்டுமென்ற தீர்மானம் அமைச்சரவையில் நிறைவேறியுள்ளது.

தமிழில் நாட்டின் பன்மைத்துவத்தினை வெளிப்படுத்தும் வகையில் அரசாங்கத்தின் ஒவ்வொரு செயற்பாடும் அமைய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த 15.08.2022 அன்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சுதந்திர தின ஏற்பாடுகள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

மேலும் குறித்த கலந்துரையாடலில், நல்லாட்சி என்று சொல்லப்பட்ட அரசாங்கத்தின் காலத்தில் தற்போதைய ஜனாதிபதியின் நல்லெண்ண வெளிப்பாடாக சுதந்திர தினத்தில் தேசிய கீதம் தமிழிலும் பாடப்பட்டமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்திலும் அந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கடற்றொழில் அமைச்சரின் குறித்த வேண்டுகோள் அமைச்சரவையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பன்மைத்துவம் சமத்துவம், சம உரிமை போன்றவை கடந்த காலங்களில் கொள்கையளவில் மாத்திரம் இருந்தமையும், நாடு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு காரணமாக இருந்தது என்பதை சுட்டிக்காட்டியதுடன், எதிர்காலத்தில் இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் மனப்பூர்வமாக உணர்ந்து கொள்ளும் வகையில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் 2020ஆம் ஆண்டு சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம், தமிழ் மொழியில் பாட மறுப்புத் தெரிவிக்கப்பட்டமை அப்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் தேசிய மற்றும் உத்தியோகபூர்வ மொழிகளாகவும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இலங்கை அரசியலமைப்பின் 16ஆவது திருத்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததை நினைவுகூரும் வகையில் டொரிங்டன் பகுதியிலுள்ள சுதந்திர சதுக்கத்தைத் திறக்கும் நிகழ்வு 1949ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் தேதி நடத்தப்பட்டதாகவும், அதில் தேசிய கீதம் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் பாடப்பட்டதாகவும் வரலாற்றுத் தகவல்கள் சொல்கின்றன.

இலங்கையில் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம், தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகள் இந்த நாட்டின் தேசிய மொழிகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன், தேசிய கீதம் சிங்களத்தில் எவ்விதம் இசைக்கப்பட வேண்டும், தமிழ் மொழியில் எவ்விதம் இசைக்கப்பட வேண்டும் என்பதை 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்தில் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் தேசிய கீதத்தை பாட அரசியலமைப்பில் இடமளிக்கப்பட்டுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஒகஸ்ட் 18ஆம் திகதி, வியாழக்கிழமை

# தமிழ்மொழியில் தேசிய கீதம்; வரவேற்புக்குரிய தீர்மானம்

பிரித்தானிய காலனித்துவத்தின் பிடிகள் தளர்ந்த 1948 இலிருந்து, இலங்கை பல்வேறுபட்ட சவால்களுக்கு உள்ளாகியிருக்கிறது. அதில் பெருந்துரதிர்ஷ்டம் மிகுந்த சவால், இலங்கையை இன்றுவரை தொற்றிக்கொண்டு நிற்கும், இனப்பிரச்சினை என்றால் அது மிகையல்ல.

2015 ஜனவரி, ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் இடம்பெற்ற சில சுதந்திர தின விழாக்களில், தேசிய கீதம் தமிழ்மொழியிலும் பாடப்பட்டிருந்தமை, வரவேற்கத்தக்க மாற்றமாகப் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், ‘சிங்கள பௌத்த’ தேசியவாதிகள், அதைத் தொடர்ந்தும் கடுமையாக விமர்சித்தும், எதிர்த்தும் வந்திருக்கிறார்கள்.

‘சிங்கள பௌத்த’ தேசியவாதத்தின் பலத்தால், மீண்டும் ஆட்சிபீடமேறிய ராஜபக்ஷக்கள் தலைமையிலான ஆட்சியின்போதே, சுதந்திர தினத்தில் தேசிய கீதம் தமிழில் பாடப்படாது என்று அறிவிக்கப்பட்டது.

2010 இல், ராஜபக்ஷ ஆட்சியின் உச்சப்பொழுதில், இலங்கையின் தேசிய கீதத்தின் தமிழ்ப் பதிப்பை முற்றாக நீக்க மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை முயற்சித்தமை, பெரும் சர்ச்சையையும், தமிழ் மக்களினதும் தமிழ்த் தலைமைகளினதும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியிருந்தது. அந்தக் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து, அம்முயற்சி கைவிடப்பட்டது. எனினும், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், ஏனைய மாகாணங்களிலும் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் சிலவற்றில் மட்டுமே, தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டு வந்தது.

‘எக்க மவககே தரு கல பவினா யமு யமு வீ நொபமா, ப்ரேம வடா சம பேத துரெர தா நமோ நமோ மாதா’ என்று சிங்களத்தில் நாம் ஒருதாய் மக்கள், அன்பால் சகல பேதங்களையும் இல்லாதொழிப்போம் என்று பாடிக்கொண்டு, தமிழ் மக்களைத் தம்மொழியில், தேசிய கீதத்தைக் கூட பாட கடந்த காலங்களில் அனுமதிக்காதமை, என்ன வகையான அறம் என்பது புரியவில்லை. கனடாவின் தேசிய கீதம், ஆங்கிலம், பிரெஞ்ச், இனுக்டிடுட் ஆகிய 3 மொழிகளில் பாடப்படுகிறது.

சுவிட்சர்லாந்து தேசிய கீதம், சுவிட்சர்லாந்தின் நான்கு உத்தியோகபூர்வ மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜேர்மன் மொழியில் முதலில் எழுதப்பட்டிருந்தாலும், சுவிஸின் ஏனைய உத்தியோகபூர்வ மொழிகளான பிரெஞ்ச், இத்தாலியன், ரொமான்ஷ் ஆகிய மொழிகளில், சுவிஸ் தேசிய கீதம் மொழிபெயர்க்கப்பட்டுப் பாடப்படுகிறது.


தென்னாபிரிக்க தேசிய கீதம், சகல மொழி பேசுவோருக்கும் ஒரே கீதமாக இருப்பினும், அது தென்னாபிரிக்காவில் பேசப்படும் ஐந்து மொழிகளைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. தென்னாபிரிக்கத் தேசிய கீதம் ஸோசா (முதற் பந்தியின் முதலிரு வரிகள்), செசோதோ (முதற்பந்தியின் கடைசி இரண்டு வரிகள்), சுலு (இரண்டாம் பந்தி), அப்ரிகான்ஸ் (மூன்றாம் பந்தி), ஆங்கிலம் (நான்காம் பந்தி) ஆகிய ஐந்து மொழிகள் சேர்த்து எழுதப்பட்டது. இந்தப் பட்டியல் நீளமானது. எத்தனையோ நாடுகளில், ஒன்றுக்கு மேற்பட்ட மொழியில் தேசிய கீதம் காணப்படுகிறது. இந்திய தேசிய கீதம், இந்தியாவின் பெரும்பான்மையினரின் மொழியில் பாடப்படுகிறது என்பதும் அறியாமையின் விளைவு; அப்பட்டமான பொய். இந்திய தேசிய கீதம் பெங்காலியில் (சமஸ்கிருதப்படுத்தப்பட்ட பெங்காலி) நோபல் பரிசு பெற்ற கவிஞர் ரவீந்திரநாத் தாகூரால் எழுதப்பட்டது. ஆக, பெரும்பான்மை இந்தியர் பேசும் மொழியில் அல்ல இந்தியாவின் தேசிய கீதம் பாடப்படுகிறது.

இவ்வளவு ஏன், சீனர்கள் பெரும்பான்மையாகவுள்ள சிங்கப்பூர் தேசிய கீதம் மலேயிலேயே எழுதப்பட்டது. அதற்குச் சீன, தமிழ், ஆங்கில உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்புகள் உண்டு. எனினும், அது மலேயிலேயே பாடப்படுகிறது. ஆகவே, பெரும்பான்மையோரின் மொழியிலேயே தேசிய கீதம் அமையவேண்டும் என்ற அவசியம் இல்லை. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க செய்த சந்தர்ப்பவாத சதி, இந்நாட்டு மக்களின் கணிசமானவர்களின் மொழியுரிமையைப் பறித்து, இந்த நாட்டில் இனப்பிரச்சினையை உருவாக்கி, பெரும் யுத்தத்துக்கு வழிவகுத்து, பெரும் அழிவையும் இன்று கூட ஒட்டக் கடினமாகவுள்ள இன ரீதியான பிளவையும் உருவாக்கியுள்ளது. அதே தவறுகளை, மீண்டும் மீண்டும் இலங்கை அரசாங்கங்கள் செய்யக்கூடாது.

‘தனிச்சிங்களச்’ சட்டத்தை எதிர்த்து லெஸ்லி குணவர்த்தன ஆற்றிய உரையில், அவர் சொன்ன, “உங்களுக்கு இருமொழிகள்; ஒரு நாடு வேண்டுமா? இல்லை, ஒரு மொழி இரு நாடு வேண்டுமா?” என்பது இன்றும் மேற்கோள் காட்டப்பட வேண்டிய சிறந்த உதாரணமே.

அந்த வகையில் அடுத்த சுதந்திர தினத்தில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்பட வேண்டுமென எடுத்திருக்கும் தீர்மானம் வரவேற்கத்தக்கது. நியாயமானது. பேரினவாதிகள் இதனை எதிர்த்து குரல் எழுப்பினாலும் கூட இந்த தீர்மானத்திலிருந்து வழுவாத கடப்பாட்டை அரசு கொண்டிருத்தல் முக்கியம். அது காலத்தின் தேவை.

# மக்களுக்கு மேலாக அரசாங்கத்தின் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கும் போக்கு



கலாநிதி ஜெகான் பெரேரா

“மனிதகுலத்தின் இயற்கையான வாழ்வுச்சூழல் ஒரு போர்நிலையில் இருந்தது. அதில் வாழ்வு தனிமையானதாக, தரம் தாழ்ந்ததாக, வெறுக்கத்தக்கதாக, கொடுமையானதாக, குறுகிய காலமுடையதாக இருந்தது. ஏனென்றால், தனி மனிதர்கள் எல்லோரும் எல்லோருக்கும் எதிரான ஒரு போர் நிலையில் இருந்தார்கள்” என்று தத்துவஞானி தோமஸ் ஹொப்ஸ் கூறினார். அதனால் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது.

இதை தத்துவஞானி ஜோன் லொக் ‘சமூக ஒப்பந்தம்’ (Social Contract) என்று அழைத்தார். தனி மனிதர்கள் தங்களது சுதந்திரங்களில் சிலவற்றை விட்டுக்கொடுத்து ஆட்சியாளரின் அதிகாரத்துக்கு அல்லது பெரும்பான்மை ஒன்றின் தீர்மானத்துக்கு பணிந்துபோவதற்கு வெளிப்படையாக அல்லது குறிப்பால் உணர்த்தி ஒத்துக்கொண்டார்கள் என்பதே சமூக ஒப்பந்தத்தின் வாதமாகும். சமூகங்கள் எவ்வாறு ஆளப்படவேண்டும் என்பதற்கான விதிகளை அரசியலமைப்புகள் வகுத்தன.

ஹொப்ஸும், லொக்கும் வாழ்ந்த 17 ஆம் நூற்றாண்டில் இருந்து அரசியலமைப்புச் சிந்தனையின் பரிணாம வளர்ச்சி, ஆட்சியாளர்களின் அதிகாரங்களை ஒழுங்கமைப்பதற்கும், ஆட்சியாளர்களிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும் வழிவகைகளை கண்டறிவதாகவே இருந்துவந்திருக்கிறது. அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்கள் மீது மட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டிய தேவை இருக்கிறது. அவர்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருப்பது அவசியம். ஆட்சியாளர்களுக்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்படாவிட்டால், பொறுப்புக்கூற வைக்கப்படாவிட்டால் அவர்கள் பெரும்பாலும் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வார்கள். அதிகாரம் ஊழலுக்கு வழிவகுக்கும். முற்றுமுழுதான அதிகாரம் முற்றுமுழுதாக ஊழலுக்கு வழிவகுக்கும் என்பது உண்மைநிலையாக இருந்துவந்திருக்கிறது.

ஆட்சியாளர்கள் தங்களது அதிகாரங்களை வகைதொகையின்றி பயன்படுத்தி வந்திருப்பதை நாம் 74 வருடங்களாக பார்த்திருக்கிறோம். சில ஆட்சியாளர்கள் மற்றைய ஆட்சியாளர்களை விட கூடுதலாக அதிகாரங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். 40 வருடங்களுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னதாக தமிழ்ப் பிரிவினைவாத கிளர்ச்சியை கையாளுவதற்காக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் ஆட்சியாளர்களின் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கு இன்னமும் கூட நடைமுறையில் நிலைத்திருக்கிறது. அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 20 ஆவது திருத்தத்தின் வாயிலாக இலங்கையின் ஆட்சியாளர்கள் முற்றுமுழுதான அதிகாரத்தைச் செலுத்திய கடந்த மூன்று வருடங்களில் நாட்டு நிலைவரம் மோசமடைந்ததைக் கண்டோம். முதற்தடவையாக நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்கிறது.

அரசியலமைப்புக்கான 22ஆவது திருத்தம் தொடர்பான தற்போதைய விவாதத்தின் நோக்கம் ஆட்சியாளர்களாக இருக்கும் அரசியல்வாதிகளின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு சிவில் சமூகத்தின் பாத்திரத்தை விரிவுபடுத்தி உறுதிப்படுத்துவதாகும். அரசியலமைப்பு பேரவையில் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளாக இருக்கப்போகும் மூவர் பற்றியதே இப்போது முக்கியமான கேள்வி. சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைக்கு ஏற்புடையவர்களாக இருக்கவேண்டும் “இதன் மூலமாக இறுதித் தீர்மானம் அரசாங்கத்தினுடையதாக இருப்பதற்கே வழிவகுக்கப்படுகிறது” என்று திருத்தத்தின் தற்போதைய வரைவு கூறுகிறது.

துரதிர்ஷ்டவசமாக, அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலான இலங்கையின் அனுபவம், மக்களுக்கு எதிராக ஆட்சியாளர்களின் அதிகாரங்களை வலுப்படுத்தும் திசையிலேயே அமைந்துவந்திருக்கிறது. சீர்திருத்தங்கள் என்று கூறப்படுபவை பெரும்பாலும் மக்களுக்கு எதிராக ஆட்சியாளர்களின் கரங்களை வலுப்படுத்தியிருக்கின்ற போதிலும் மக்களுக்காகவே அவ்வாறு செய்யப்பட்டதாக நியாயப்படுத்தப்படுகிறது.

## தேய்வுறும் கட்டுப்பாடுகள்

1972 அரசியலமைப்பு, பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து நாடு பெற்றுக்கொண்ட அரசியலமைப்பை பதிலீடு செய்தது. நீதித்துறையினதும், சிவில் சேவையினதும் சுதந்திரத்தை உறுதிப்படுத்திய முந்தைய அரசியலமைப்பு மனித உரிமைகளுக்கும், சமூகங்களுக்கிடையில் பாரபட்சமின்மைக்குமான விசேட பாதுகாப்புக்களையும் கொண்டிருந்தது. ஆனால், அந்த பாதுகாப்புகள் 1972 அரசியலமைப்பில் இருந்து நீக்கப்பட்டன. ஆளும் அரசியல்வாதிகள் இறைமையுடைய மக்களின் விருப்புகளை உருவகப்படுத்துகிறார்கள் என்று நியாயம் கற்பிக்கப்பட்டு அந்த புதிய அரசியலமைப்பு அவர்களுக்கு அதிகாரமளிப்பதில் நாட்டம் காட்டியது. தெரிவுசெய்யப்பட்ட அரசியல்வாதிகள் தெரிவுசெய்யப்படாத நீதிபதிகளையும், சிவில் சேவையாளர்களையும் விட மக்களுக்கு கூடுதல் நெருக்கமானவர்களாக இருக்கிறார்கள் என்று வாதிடப்பட்டது.

சிவில் சேவையாளர்கள் மக்களிடமிருந்து விலகியிருப்பதால் பக்கச்சார்பற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த பெறுமதி பெருமளவுக்கு விளங்கிக்கொள்ளப்படவில்லை. புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்ததும் நீதிபதிகள் பதவி நீக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார்கள்.1978 அரசியலமைப்பு 1972 அரசியலமைப்பின் நடவடிக்கைகளையே திரும்பவும் செய்தது. நீதிபதிகள் மீண்டும் பதவிநீக்கப்பட்டு அவமதிப்பாக நடத்தப்பட்டார்கள். பின்னர் ஒரு கட்டத்தில் நீதிபதிகள் கல்வீச்சுக்கும் கூட இலக்கானார்கள்.

நாம் வளர்த்தெடுத்த இந்த கலாசாரங்கள்தான் இன்றைய நெருக்கடிக்கு வழிவகுத்து ‘அரகலய’ மக்கள் போராட்டத்துக்கான தளத்தை அமைத்தன.1978 அரசியலமைப்பு, 1972 அரசியலமைப்பில் இருந்த மத்தியமய அதிகாரத்தை மேலும் பல படிகள் உயர்த்திச் சென்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற தனியொரு பதவியிடம் குவித்திருக்கிறது. மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற முறை நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாக இருந்த மன்னர்களைப் போன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி சட்டத்துக்கு மேலானவராகக்கூட இருக்கமுடியும் என்றாகிறது.

“ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுகின்ற அதிகாரம் ஒன்று மாத்திரமே தன்னிடம் இல்லை” என்று இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன கூறினார். தெரிவுசெய்யப்படுகின்ற ஆட்சியாளர்களின் கைகளில் இந்த அதிகாரங்கள் போகும்போது மட்டுப்பாடு இன்றி அதிகார துஷ்பிரயோகமும், ஊழலும் வளரும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளிடம் இருந்து சுதந்திரம் அடைந்தபோது ஆசியாவின் உச்சியில் இருந்த நாடு இன்று அடிப்பரப்புக்கு அண்மையாக நிற்கிறது. அதன் மக்களின் வாழ்நாள் சேமிப்புகள் ஒரு அரை வருடத்திற்குள் அரைவாசியாக்கப்பட்டு விட்டது. இதற்காக ஒரு அரசியல்வாதியேனும் சட்டரீதியான பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்படவில்லை.

22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் 2001 ஆம் ஆண்டின் 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துடன் ஆரம்பித்த அரசியலமைப்புத் திருத்தங்கள் குழாமைச் சேர்ந்ததாகும். அரசாங்கம் பலவீனமடைந்ததன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி அந்த திருத்தத்துக்கு இணங்கினார். இப்போது போன்றே அப்போதும் சமுதாயத்தின் வசதி குறைந்த மக்களின் கட்சியான ஜே.வி.பி. திருத்தத்தை கொண்டுவந்ததில் முன்னணியில் நின்றது. அந்தத் திருத்தத்தின் விளைவாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு நாடாளுமன்றத்துடனும், அரச நிறுவனங்களுடனும், சிவில் சமூகத்துடனும் அந்த அதிகாரங்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. தடுப்புக்கள் மற்றும் சமப்படுத்தல்கள் (Checks and Balances ) முறைமையை பலப்படுத்தி அதன்முலமாக தேசிய நலன்களுக்காக நல்லாட்சியை மேம்படுத்துவதே 17 ஆவது திருத்தத்தின் பின்னால் இருந்த எண்ணமாகும். இதை ஒத்ததாகவே 19 திருத்தமும் அமைந்தது. ஒரு கூட்டணி கட்சிகள் தாங்கள் மக்களின் தேர்தல் ஆணையூடாக பதவி கவிழ்த்த ஆட்சியாளரின் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு எதிராக இந்த திருத்தத்தை கொண்டுவந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றின.

## உயர்மட்ட ஊழல்

ஆனால், ஆட்சியாளர்களின் அதிகாரங்கள் மீதான மட்டுப்பாடுகளை பிறகு ஆட்சியாளர்களாக வரவிருப்பவர்களோ அல்லது அவர்களது கட்சியைச் சார்ந்தவர்களோ மறுப்பின்றி ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. 17ஆவது திருத்தம் 2010 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 18 ஆவது திருத்தத்தினால் தலைகீழாக மாற்றப்பட்டது. அந்தத் திருத்தம் ஜனாதிபதி பதவி இழந்த அதிகாரங்களை மீட்டுக்கொடுத்ததுடன், மேலும் சில அதிகாரங்களையும் வழங்கியது. இதனால் ஆட்சியாளர்களின் அதிகார துஷ்பிரயோகம் கடுமையாக அதிகரித்தபோது அடுத்து வந்த அரசாங்கம் 19 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்து ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் ஒரு தடவை குறைத்தது.

2015 ஜனாதிபதி தேர்தலில் பெறப்பட்ட மக்கள் ஆணையின் பிரகாரமே இவ்வாறு செய்யப்பட்டது. ஆனால், மீண்டும் 2019 ஆம் ஆண்டில் அடுத்த அரசாங்கத்தை அமைத்தவர்கள் 19 வது திருத்தத்தை நிராகரித்து 20 வது திருத்தத்தை கொண்டுவந்தனர். இது ஜனாதிபதி இழந்த அதிகாரங்களை மீண்டும் வழங்கியதுடன், மேலும் சில அதிகாரங்களையும் கொடுத்தது.

இரத்துச் செய்யப்படவிருக்கும் இந்த 20 ஆவது திருத்தத்தின் கீழ் தான் நாட்டில் ஊழலும், அதிகார துஷ்பிரயோகமும் உச்சநிலையை எட்டி மக்களை முன்னென்றும் இல்லாத வகையிலான பொருளாதார இடர்பாடுகள் மற்றும் வறுமைக்குள் மூழ்கடித்தன. இந்த இடர்பாடுகள்தான் ‘அரகலய’ அல்லது போராட்ட இயக்கம் தோன்றுவதற்கு வழிவகுத்தன. இந்த இயக்கம் ஜனாதிபதி மாளிகையை மக்கள் முற்றுகையிடுவதிலும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையை பதவிவிலக வைப்பதிலும் முடிந்தது.

வாழ்நாள் பூராவும் கஷ்டப்பட்டு உழைக்கும் நடுத்தர வர்க்கம் மூன்று வருட காலத்திற்குள் சுருங்கிப்போய் வறியவர்களின் அணியில் சேர்ந்திருக்கிறது. ஆனால், ஆட்சியாளர்களோ வாழ்நாள் சேமிப்பை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு முன்னுரிமை கொடுப்பது குறித்து சிந்திப்பதாக தெரியவில்லை. அவர்களது கவனம் எல்லாம் 2015-2019 காலகட்டத்தில் ஆட்சியாளர்களில் சிலருக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் நேர்ந்தவற்றிற்கும் ‘அரகலய’ போராட்டத்தின்போது தீக்கிரையாக்கப்பட்ட ஆட்சியாளர்களின் வீடுகளுக்கும் நஷ்டஈடு வழங்குவதிலேயே இருக்கிறது.

‘அரகலய’ ராஜபக்ஷக்கள் போன்ற அரசியல்வாதிகளை மாத்திரமல்ல, பரந்தளவில் ஊழல் அரசியல் சக்திகளையும் இலக்குவைத்தது.

“கோட்டா வீட்டுக்கு போ”, “225 பேரும் வீட்டுக்குப் போ” போன்ற சுலோகங்கள் மூலம் இது வெளிப்பட்டது.

(7ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய நாளில்...

★1783 – பிரித்தானியா எங்கும் பெரும் எரிவெள்ளி அவதானிக்கப்பட்டது.

★1868 – இலங்கையின் கிழக்குப் பகுதிகளில் முழுமையான சூரிய கிரகணம் அவதானிக்கப்பட்டது.

★1868 – பிரெஞ்சு வானியலாளர் பியேர் ஜோன்சன் சூரிய கிரகணத்தை ஆராயும்போது ஈலியம் என்ற தனிமத்தைக் கண்டுபிடித்தார்.

★1920 – பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டமூலம் ஐக்கிய அமெரிக்காவில் கொண்டு வரப்பட்டது.

★1945 – சுகர்னோ இந்தோனேசியாவின் முதலாவது அரசுத் தலைவராகப் பதவியேற்றார்.

★1950 – பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் யூலியன் லாகூட் வலதுசாரிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

★2008 – பாகிஸ்தானில் ஜனாதிபதி பெர்வேஸ் முஷாரஃப் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதையடுத்து அவர் பதவியைத் துறந்தார்.

## நக்கல் நமசிவாயம்

“கோட்டா கோ ஹோம்” எண்டு சொல்லி எந்த நேரம் போராட்டத்த ஆரம்பிச்சாங்களோ தெரியேல்ல... கடைசிவரைக்கும் நிரந்தரமா அவரால ஒரு வீட்டுக்கும் போக முடியாமக் கிடக்குது..!



# துறைத்தலைவர் பதவி கோரி யாழ். பல்கலை பேராசிரியர் உயிரை மாய்க்க முயற்சி

(யாழ். நிருபர்)

தனக்கு துறைத்தலைவர் பதவி தரக் கோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ். பல்கலைக்கழகத்துறை ஒன்றின் தலைவராக இருந்த பேராசிரியர் தனது மேல் படிப்பொன்றுக்காக வெளிநாடு செல்ல அனுமதி கோரியிருந்தார். அதற்கான அனுமதி அவருக்கு வழங்கப்பட்டது. அதனால் , அவரது துறைத்தலைவர் பதவி மற்றுமொரு பேராசிரியருக்கு வழங்கப்படவிருந்தது.

இந்நிலையில், துறைத்தலைவராக இருந்த பேராசிரியர் தனது தனிப்பட்ட காரணத்தால் வெளிநாடு சென்று கற்கும் முடிவை இடைநிறுத்தி தனது துறைத்தலைவர் பதவியில் நீடித்தார்.

அதனால் புதிதாக துறைத்தலைவராக நியமனம் பெறவிருந்த பேராசிரியர் ஏமாற்றத்துக்குள்ளானார்.

அதன் காரணமாக கடும் மனஉளைச்சலுக்கு உள்ளாகி இருந்த பேராசிரியர், கடந்த திங்கட்கிழமை (15) தனக்கு நெருக்கமானவர்களிடம் தனக்கு துறைத்தலைவர் பதவி கிடைக்காவிடின் பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலய முன்றலில் தீக்குளித்து உயிரை மாய்ப்பேன் எனக் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் (16) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினுள் நுழைந்த குறித்த பேராசிரியர் துணைவேந்தர் முன்னிலையில் தனது உடம்பில் மண்ணெண்ணெயை ஊற்றி தீக்குளிக்க முயன்றுள்ளார். அதனை அவதானித்த துணைவேந்தர் விரைந்து செயற்பட்டு, அவரை தடுத்து நிறுத்தி, சமாதானப்படுத்தி அங்கிருந்து அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை பகிடிவதை புரிந்தவர்கள் எனும் சந்தேகத்தில் தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்பட்ட 18 மாணவர்களின் படங்களை விரிவுரையில் பேராசிரியர் ஒருவர் காண்பித்து, “இவர்கள்தான் பல்கலைக்கழக மாபியாக்கள்” என கூறியமையால் மனஉளைச்சலுக்கு உள்ளான மாணவன் ஒருவன் கடந்த திங்கட்கிழமை தனது உயிரை மாய்க்க முயன்ற நிலையில் குடும்பத்தினரால் காப்பாற்றப்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.




அத்துடன், மற்றுமொரு பல்கலைக்கழக மாணவி ஒருவர் யாழ். புறநகர்ப் பகுதியிலுள்ள தனது வீட்டில் உயிரை மாய்க்க முயன்றதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர், மாணவர்கள் தற்கொலைக்கு முயன்ற சம்பவத்தால் யாழ். பல்கலை சமூக மட்டத்தில் அதிருப்தியும் விசனமும் எழுந்துள்ளது.

# யாழ். பிரதேச செயலகங்களினால் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அனுமதி கடிதங்கள் இரத்து!

## அரச அதிபர் மகேசன் அறிவிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களினால் நேற்று (17) புதன்கிழமை முன் திகதியிடப்பட்ட எரிபொருள் விநியோகக் கடிதங்கள் எவையும் செல்லுபடியாகாது - என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (16) யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான மாவட்ட மட்ட கலந்துரையாடலின் தீர்மானங்களை அறிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருள் விநியோகத்திற்காக பிரதேச செயலகங்களினால் திகதியிடப்பட்டு இதுவரை வழங்கப்பட்ட எரிபொருள் விநியோகக் கடிதங்கள் செல்லுபடியற்றதாகும்.



இவ்வாறு வழங்கப்பட்ட கடிதங்களை அநேகமானவர்கள் போட்டோகொப்பி எடுத்து தொடர்ச்சியாக பயன்படுத்தி வருவதாக மாவட்ட செயலாளருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், பிரதேச செயலாளர்களினால் இதுவரை வழங்கப்பட்ட கடிதங்கள் அனைத்தும் செல்லுபடியற்றவையாக கருதப்படும்.

எதிர்வரும் 28ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வருகின்ற QR நடைமுறையின் அடுத்தகட்டம் ஆரம்பிக்கும் வரை பிரதேச செயலகங்களினால் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஒரே பொறிமுறையின் கீழ் புதிய அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படும்.

ஆகவே, எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் பிரதேச செயலகங்களினால் இன்று (நேற்று) புதன்கிழமை முதல் புதிய திகதியிடப்பட்ட கடிதங்களை மட்டும் கவனத்தில் எடுக்க வேண்டும் – என்றார்.

# காலபோக நெற்செய்கைக்கான முதற்கட்ட யூரியா யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது

(சாவகச்சேரி நிருபர்)

யாழ். மாவட்டத்தில் 2022/23ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கைக்கான முதற்கட்ட யூரியா உரங்கள் நேற்று முன்தினம் (16) யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன.

இவ்வாறு 4 கொள்கலன்களில் வந்த 200 தொன் யூரியா உரத்தை நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கையேற்று கோண்டாவில் உரக் களஞ்சியத்தில் வைத்து கமநல சேவை நிலைய அதிகாரிகளிடம் கையளித்திருந்தார்.



இம்முறை யாழில் காலபோக நெற்செய்கைக்கு 1300 தொன் யூரியா தேவைப்பாடாக உள்ள நிலையில், மிகுதி உரங்கள் விரைவில் கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன், தொலைபேசி வாயிலாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை தொடர்பு கொண்டு யாழ். மாவட்ட விவசாயிகள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்ததுடன், யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மரக்கறிச் செய்கைக்கான உரங்களை பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வட்டக்கச்சி வித்தியாலய அதிபர் பங்கையற்செல்வனின் ‘நிழல்கள் சொல்லும் கதைகள்’ நூல் வெளியீடு நாளை




(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி, வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் அ.பங்கையற்செல்வனின் ‘நிழல்கள் சொல்லும் கதைகள்’ நூல் வெளியீடு நாளை 19ஆம் திகதி பிற்பகல் மூன்று மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் பங்கையற்செல்வனால் எடுக்கப்பட்ட புகைப்படங்களுக்கு மாணவர்கள் எழுதிய கதைகளை கொண்டமைந்ததாக காணப்படும் இந்நூல் வெளியீட்டு நிகழ்வானது காவேரி கலா மன்றத்தின் இயக்குநர் அருட்தந்தை ரி.யோசுவாவின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் வரவேற்புரையை ப.கஜிந்தனும், நூல் அறிமுக உரையை கவிஞர் கருணாகரனும், நூலுரையை வைதேகி நரேந்திரன், இராஜேஸ்கண்ணா, ஸ்டீபன் சஞ்சிகனும் ஆற்றவுள்ளனர். யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

# ஹட்டன் - நோட்டன் வீதியில் இ.போ.ச. பஸ் ஒன்று விபத்து

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

ஹட்டன் - நோட்டன் வீதியில் காசல்ரீ கொலனிக்கு அருகில் இடம்பெற்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஒன்று விபத்துக்குள்ளானது. அதனால் குறித்த வீதியில் போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது.

நேற்று (17) காலை 7.15மணியளவில் கொத்தலனைவில் லக்ஸபானவிலிருந்து ஹட்டன் நோக்கி பயணித்த பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் எவருக்கும் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை. எனினும், குறித்த பகுதியில் சிறிய வாகனங்கள் மாத்திரமே செல்லக்கூடியதாக இருந்தன.



தற்போது குறித்த வீதியின் ஒஸ்போனலிருந்து ஹட்டன் செல்லும் பஸ்கள் காசல்ரீ சந்தியில் இருந்தே பயணத்தை ஆரம்பிக்க வேண்டியதாக உள்ளது. அத்துடன், ஹட்டன் - கொத்தலன - லக்ஸபான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஒஸ்போனிலிருந்து சுமார் 3கிலோமீற்றர் தூரம் வரையில் மாணவர்கள், தொழிலுக்குச் செல்வோர் என பலரும் போக்குவரத்து இன்மையால் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

இந்நிலையில், ஹட்டன் டிப்போ திருத்தப்பணி ஊழியர்களினால் 10.30மணியளவில் விபத்துக்குள்ளான பஸ்சினை அகற்றிய பின்னர் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது.

# போதை மாத்திரையுடன் இளைஞன் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் ஒருதொகை போதை மாத்திரைகள், மாத்திரைகளை விற்பனை செய்ததன் ஊடாக பெற்றுக்கொண்ட பணம் என்பவற்றுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் வீரபத்திரர் கோவிலை அண்டிய பகுதியில் இளைஞன் ஒருவர் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபடுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

தகவலின் பிரகாரம் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார், போதை மாத்திரை விற்பனை செய்தார் எனும் குற்றச்சாட்டில் 23 வயதான இளைஞனை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்தவேளை அவரது உடைமையிலிருந்து ஒரு தொகை போதை மாத்திரை, அவற்றை விற்பனை செய்ததன் மூலம் பெற்றுக்கொண்ட பணம் என்பவற்றை மீட்டனர்.

அதனையடுத்து, கைதுசெய்யப்பட்ட இளைஞனை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





ஊவா மாகாண பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை தடங்கலின்றி முன்னெடுத்தல் மற்றும் அது தொடர்பான முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலொன்று நேற்று(17) ஊவா மாகாண செயலாளர் அலுவலகத்தில் ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்றது.

# கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர் இணைப்பு தொடர்பில் சப்ரகமுவ மாகாணத்துக்கு அநீதி

## அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் சாதகமான தீர்வு கிடைத்ததாக செந்தில் தெரிவிப்பு

(அவிசாவளை நிருபர்)

தேசிய டிப்ளோமா பாடநெறியைப் பயில்வதற்காக 2019ஆம் ஆண்டு மற்றும் 2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பெறுபேற்றின் அடிப்படையில் பயிலுனர்களின் இரு தொகுதியினரை ஒரே தடவையில் தேசியக் கல்வியற் கல்லூரிகளுக்கு உள்வாங்கும் வர்த்தமானி அறிவித்தலில் சப்ரகமுவ மாகாண மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் சப்ரகமுவ தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர்களுக்கிடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று கல்வி அமைச்சில் இடம்பெற்றது.



இது தொடர்பாக, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் மொழிமூல பாடசாலைகளின் அதிபர்கள் இ.தொ.கா. உபசெயலாளர் ரூபன் பெருமாளிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய, இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து மேற்படி கலந்துரையாடல் நேற்றுமுன்தினம்(16) இடம்பெற்றது.

இப்பிரச்சினையை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கவனத்திற்கு கொண்டுவந்து சப்ரகமுவ விண்ணப்பதாரிகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்கப்பெற வேண்டும் என இதன்போது இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமானால் எடுத்துரைக்கப்பட்டது.

கல்வியமைச்சரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் ஆசிரியக்கல்விக்கான ஆணையாளர், பெருந்தோட்ட பாடசாலைகளின் அபிவிருத்திப்பிரிவின் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு சாதகமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

வர்த்தமானியின் பிரகாரம், ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கான விசேட நிபந்தனையின் அடிப்படையில் தமிழ்மொழி மூலம் 295பேரும் சிங்கள மொழியில் 120பேரும் ஆங்கில மொழிமூலம் 20பேரும் உள்ளடங்குகின்றனர். இதன் அடிப்படையில் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்ட மாணவர்களில் 56பேருக்கு மாத்திரமே வாய்ப்புள்ளது.

நாடளாவிய ரீதியில் ஸ்ரீபாத கல்லூரி அல்லாத ஏனைய கல்வியியற் கல்லூரிகளுக்கு கோரப்பட்டுள்ள ஆயிரத்து 630பேரில் கேகாலைக்கு 3பேருக்கும், இரத்தினபுரிக்கு 21பேருக்கு மாத்திரமே வாய்ப்புள்ளது. இதன் அடிப்படையில் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது சப்ரகமுவ மாகாண மாணவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும் சப்ரகமுவவில் தமிழ் மொழிமூலம் 900ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளதாகவும் அமைச்சின் அதிகாரிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டதற்கு அமைய, கல்வி அமைச்சின் ஆசிரியக்கல்விக்கான பிரதான ஆணையாளர் தற்போது வர்த்தமானியில் மாற்றத்தை ஏற்படுத்துவது கடினம். எனினும் பிரச்சினைக்கான தற்காலிக தீர்வாக இம்முறை வர்த்தமானியில் ஸ்ரீபாத தேசியக் கல்வியற் கல்லூரிக்கு தமிழ் மொழிமூலம் 65வீத மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனினும் 75வீதம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எனவே இங்கு இன்னும் 10வீத அதிகரிப்பு உள்ளது. அதனால் 10வீத அதிகரிப்பான 45 விண்ணப்பதாரிகளுக்கு சப்ரகமுவ மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

திகதி 16.08.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4849
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.8,145,890.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 7 1 0 9 7 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.36,200,092.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3091
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,212,140.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 01 09 15 48
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.69,624,379.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1308
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,439,960.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 8 0 8 8 3 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,651,791.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 879
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,064,080.00
வெற்றி இலக்கினம் A வெற்றி இலக்கங்கள் 01 04 15 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 121,631,650.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 158
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,519,520.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 18 30 49 54
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,811,574.20

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1197
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,006,360.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.266,097,742.00
U 07 24 26 73 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# நாட்டின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்து இராஜதந்திரிகளுக்கு அமைச்சர் சப்ரி விளக்கம்

## ஜெனீவா கூட்டத்தொடரை எதிர்நோக்கும் வகையில் ஏற்பாடு



ஜெனீவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக தற்போதைய அபிவிருத்திகள் குறித்து விளக்கமளிக்கும் முகமாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, கடந்த திங்கட்கிழமை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து கொழும்பை தளமாகக் கொண்ட தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை சந்தித்தார்.

சட்ட மா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், வெளியுறவுச் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் நிதிச் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோரும் இந்த விளக்கமளிக்கும் நிகழ்வில் பங்கேற்றனர்.

அரசியலமைப்புக்கு அமைவாக பதவிகளை ஜனநாயக ரீதியாக மாற்றுதல் உட்பட இலங்கையின் தற்போதைய அபிவிருத்திகளை அமைச்சர் சப்ரி சுட்டிக்காட்டினார். மக்களுக்கான அதிக ஸ்திரத்தன்மைக்கு வழிவகுத்த சில உடனடி சவால்களை எதிர்கொள்வதில் ஏற்கனவே காணக்கூடிய முன்னேற்றத்தின் பல பகுதிகளை அவர் விவரித்தார். அரசியல் முன்னணியில், சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் மேலும் விளக்கினார்.

19ஆவது திருத்தத்தை திறம்பட மீட்டெடுக்கும் அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளமையையும் அவர் நினைவுகூர்ந்தார். இந்த நடவடிக்கை நாடாளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும், அரசாங்கத்தின் நிர்வாகக் கிளைகளின் மேற்பார்வைக்கும் மற்றும் முக்கிய நிறுவனங்களின் சுதந்திரத்திற்கும் பங்களிக்கும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் விரிவான மீளாய்வுக்கான முன்னேற்றம் குறித்தும் அவர் விளக்கினார். மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை உறுதிசெய்வதற்கும், ஏற்றத்தாழ்வுகளைத் தடுப்பதற்கும், தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் பாதகமான தாக்கங்களை மக்கள் தொகையின் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளைத் தணிப்பதற்காகவும் அரசாங்கம் கவனம் செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அண்மைய ஆண்டுகளில் நாட்டில் முன்னெப்போதும் இல்லாத சூழ்நிலை நிலவியபோதிலும், கொவிட் தொற்றுநோய்க்குப் பின்னர், உள்நாட்டு செயன்முறைகளின் மூலம் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத் துறையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள், நீதி மற்றும் சமத்துவம் தொடர்பான விடயங்களில் மேலும் முன்னேற்றம் அடையும் வகையில் ஒருமித்த கருத்தை உருவாக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. மனித உரிமைகள் பேரவையுடனான தனது ஆக்கபூர்வமான ஈடுபாட்டை எதிர்வரும் 51ஆவது அமர்வில் இலங்கை தொடரும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் வலியுறுத்தினார்.

நிதிச் செயலாளர் சிறிவர்தன, பாதகமான தாக்கங்களைத் தணிக்கும் நோக்கில் பாதிப்புக்குள்ளான குழுக்களுக்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தி, தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து விளக்கமளித்தார்.

அண்மையில் இடம்பெற்ற போராட்டங்கள் மற்றும் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை தொடர்பான அரசாங்கத்தின் பிரதிபலிப்பு தொடர்பான சட்டக் கட்டமைப்பை சட்ட மா அதிபர் விளக்கினார். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கட்டமைப்பின் பல நடைமுறைகள் மற்றும் செயன்முறைகளுடன் இலங்கையின் தொடர்ச்சியான மற்றும் விரிவான ஈடுபாட்டை வெளியுறவுச் செயலாளர் விஜேவர்தன எடுத்துரைத்தார்.

விளக்கக்காட்சிகளைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலின்போது, ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர்-ஹம்டி, சவால்களை எதிர்கொள்வதிலும், பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை விரிவுபடுத்துவதிலும் அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் மீளாய்வுகளையும் அவர் ஒப்புக்கொண்டார். சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் மற்றும் சமூக ஒற்றுமை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய ஐந்தாண்டு கால ஒத்துழைப்புக் கட்டமைப்பில் இலங்கை அரசாங்கத்துடன் ஐக்கிய நாடுகள் சபை கூட்டுசேரும் என ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் அறிவித்தார்.

# மஸ்கெலியா வைத்தியசாலையில் இரத்தப் பரிசோதனைகள் இல்லை

## நோயாளர்கள் பெரும் அவதி

**(மஸ்கெலியா செய்தியாளர்)**

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் கடந்த சில ஆண்டுகளாக நோயாளிகள் இரத்தப் பரிசோதனை சேவைகள் இல்லாமையால் அவதிப்பட்டு வருகின்றனர்.

1972ஆம் ஆண்டுமுதல் இவ்வைத்தியசாலையில் தொடர்ந்து ஆய்வுகூட சேவைகள் இடம்பெற்றன.

கடந்த 2005 முதல் அங்கு கடமையாற்றிய ஆய்வுகூட உத்தியோகத்தர் இளைப்பாறிய பின்னர் புதியவர்கள் நியமனம் பெற்று வரவில்லை.

அக்காலத்தில் இவ்வைத்தியசாலையில் இருந்த ஆய்வுகூட உபகரணங்கள் அனைத்தும் ஹங்குராங்கெத்த வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரியவருகிறது.

கடந்த 2015 முதல் இவ்வைத்தியசாலையில் பணியாற்றிய மாவட்ட வைத்திய அதிகாரி லியத்தபிட்டிய இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளிகளுக்கு இப்பரிசோதனை மேற்கொள்ள ஆய்வுகூடம் ஏற்பாடு செய்து வாரத்தில் இரண்டு நாட்கள் கிளங்கன் வைத்தியசாலையிலிருந்து ஆய்வுகூட அதிகாரி ஒருவர் வந்து இச்சேவையை செய்தார். காலப்போக்கில் அதுவும் இல்லை.

தற்போது இப்பகுதியிலுள்ள நோயாளிகள் இச்சேவையை பெற்றுக்கொள்ள தனியார் ஆய்வுகூடங்களில் காத்து நிற்கும் நிலையில் அதிகமான பணம் அறவிடுவதாக புகார் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் 100 ரூபாவுக்கு மேற்கொள்ளப்பட்ட இரத்தப் பரிசோதனைக்கு தற்போது 650 ரூபா வழங்க வேண்டும் எனவும் ஏனைய சேவைகள் பெற்றுக்கொள்ள ஆயிரக்கணக்கில் பணம் தேவை எனவும் இதனால் நோயாளிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் கூறுகின்றனர்.

கடந்த காலங்களில் இருந்துபோல் இவ்வைத்தியசாலைக்கு இரசாயனகூடம் தேவை. இங்கு வரும் நோயாளிகளில் அதிகளவானோர் பெருந்தோட்ட மக்கள் மற்றும் கிராம வாசிகளாவார்கள்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ரயிலில் மோதுண்டு நபர் ஒருவர் பலி

**(செ.தி.பெருமாள்)**

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் மல்லிகைப்பூசந்தி பகுதியில் ரயிலில் மோதுண்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த ரயிலிலேயே குறித்த நபர் நேற்றுமுன்தினம் (16) காலை 11.45 மணியளவில் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

மஸ்கெலியா - அப்கோட் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய சிவனு கண்ணியப்பன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், இது தற்கொலையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை அபகரித்த நபர்

## தலவாக்கலையில் மிளகாய்த்தூள் வீசிவிட்டு கொள்ளை

**(தலவாக்கலை செய்தியாளர்)**

சமையலறையில் வீட்டு வேலை செய்து கொண்டிருந்த பெண்ணொருவரின் கழுத்தில் அணிந்திருந்த இரண்டரை பவுண் தங்கச் சங்கிலியை அவர் முகத்தில் மிளகாய்ப் பொடியை எறிந்துவிட்டு அதனை களவாடிச் சென்ற சம்பவம் ஒன்று தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தில் நேற்று (17) அதிகாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குடியிருப்புக்கு பின்னால் இருந்த சமயலறையில் அதிகாலை 6 மணியளவில் குறித்த பெண் வேலை செய்துகொண்டிருந்தபோது அவர் முகத்தின் மீது மிளகாய்ப்பொடியை தூவி விட்டு அவர் வாயை மூடி கழுத்தில் அணிந்திருந்த இரண்டரை பவுண் தங்கச் சங்கிலியை அபகரித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளான். இதனையடுத்து பெண் கூச்சலிட அயலவர்களும் ஓடிவந்து திருடனை தேடியபோது அவன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளான். இதனையடுத்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற தலவாக்கலை பொலிஸார் குறித்த பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொண்டதோடு சந்தேக நபரை தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# கண்டி மாவட்டத்தில் இன்று நீர் வெட்டு

**(பீ.எம். முக்தார்)**

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கண்டி வடக்கு ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் நவயாலதென்ன முற்சந்திக்கு பிரதேசத்துக்கு குழாய்நீர் இணைப்பு வழங்கப்படவுள்ளதால் இன்று 18ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிமுதல் நாளை 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணி வரையிலான 14 மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகுமென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

உடதலவின்ன, வத்தேகெதர, கங்கா மாவத்தை, நவயாலதென்ன, சரசவி மாவத்தை, கலதெனிய, இந்திரா மாவத்தை, பல்லேதலவின்ன, உஸ்ஸியாகொட, வத்தளவத்தை மற்றும் பொல்கொல்ல ஆகிய பகுதிகள் நீர் விநியோத் தடையினால் பாதிக்கப்படும். இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலவச மருத்துவ முகாம்

**(பதுளை நிருபர்)**

'நோயற்ற ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளிலான இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹப்புகஸ்தன்னை – வேவெல்கெட்டிய கிராமிய வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெறும் இவ்வைத்திய முகாமில் நோய் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எனவே, அனைவரும் இதன் பயன்களைப் பெற்றுக்கொள்ளும்படி ஏற்பாட்டாளர்களான இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# செய்தித் துளிகள்

- கண்டி, கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உகுரெஸ்பிட்டியவில் தனிமையில் இருந்த பெண்ணொருவர் துணியால் கழுத்து இறுக்கி கொலைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் 76 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார். அந்தப் பெண்ணிடமிருந்த 03 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகை அபகரிக்கப்பட்டுள்ளது.
- பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெகசின் வீதியில் 19 கிராம் 750 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த மூவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 22, 34, 42 ஆகிய வயதுடைய பொரளை மற்றும் தெமட்டகொட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.
- மாலபேயில் 11 கிராம் 50 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த இருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 24, 43 வயதுடைய ஹோக்கந்தரையைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.
- தங்காலை, மித்தெனியவில் கடந்த ஜூன் 06ஆம் திகதி நபர் ஒருவரை கொலைசெய்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணத்துடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
- சப்புகஸ்கந்தவில் மோட்டார்சைக்கிள், முச்சக்கர வண்டி மற்றும் வாகன உதிரிப்பாகங்களை நீண்டகாலமாக திருடிவந்த 27 வயதான நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர். இந்த சந்தேகநபர் பியகம, சப்புகஸ்கந்த உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
- தம்புத்தேகம, ராஜாங்கனை ஆற்றில் நீராடச் சென்ற பெண்ணொருவர் நீரில் மூழ்கி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். ராஜாங்கனையைச் சேர்ந்த 47 வயதான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
- தொம்பே பொலிஸ் பிரிக்குட்பட்ட ஹங்வெல்ல- கிரிதர வீதியில் லொறியொன்றுடன் மோட்டார்சைக்கிளொன்று நேருக்கு நேர் மோதியதில் மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இவ்விபத்தில் 27, 28 வயதுடைய ஹங்வெல்ல மற்றும் வக ஆகிய பகுதிகளைச் சேர்ந்தோரே உயிரிழந்துள்ளனர்.

# கெஹேலியவின் வீட்டுக்கு தீ வைத்த மூவர் கைது

அமைச்சசர் கெஹேலியா ரம்புக்வெல்லவின் வீட்டுக்கு தீயிட்டு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் கடந்த மே மாதம் 09ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களின்போது கண்டியிலுள்ள கெஹேலிய ரம்புக்வெல்லவின் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸாரால் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் முல்கம்பல, ஈரஸ்ஸகல மற்றும் விகார மாவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


## 17.08.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 137 3 00 | 15 22 7 |
| கனேடியன் டொலர் | 164 8542 | 178 0628 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 6367 | 43 851 |
| யூரோ | 250 5 71 | 265 7235 |
| ஜப்பான் யென் | 1 5428 | 1 6506 |
| சிங்கப்பூர் டொலர் | 146 4 47 | 157 5645 |
| ஸ்ரேலிங் பவுன் | 32 4066 | 337 3 0 |
| சுவிஸ் பிரான்ங் | 262 822 | 280 6153 |
| ஐ.அ.டொலர் | 246 2040 | 257 5716 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 3044 |
| குவைட் | குவைட் தினார் | 0,065 5 75 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 4352 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 60 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0321 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1601 |





இலங்கை வங்கி உள்ளிட்ட அரச வங்கிகளில் வெளிநபர்களின் தலையீட்டைத் தவிர்த்து அவற்றைப் பாதுகாக்குமாறு வலியுறுத்தி கொழும்பிலுள்ள இலங்கை வங்கி தலைமையகத்துக்கு முன்னால் ஊழியர்களால் நேற்று (17) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

# சர்வகட்சி அரசாங்கத்துக்கான காலம் கடந்துவிட்டது!

## மற்றவர்களின் கொள்கைகளை நியாயப்படுத்த தாம் தயாராக இல்லையென ஹரிணி அமரசூரிய எம்.பி. சுட்டிக்காட்டு



அரசியலமைப்பின் குறைகளை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு மக்களின் அபிப்பிராயங்களுக்கும் அபிலாஷைகளுக்கும் எதிராக செயற்பாடுவதை எதற்காகவும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோன்று, சர்வகட்சி அரசாங்கத்தை ஆதரவளிப்பதில்லை என்ற விடயத்தில தமது கட்சி உறுதியாக இருப்பதாக அந்த தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாணந்துறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (16) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனை குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதில்லை என்ற விடயத்தில் தெளிவாக இருக்கிறோம். சர்வகட்சி அரசாங்க மென்றவொன்று தற்போது இல்லை. ரணில் மற்றும் ராஜபக்ஷக்களும் ஒன்றாக கைகோர்த்துள்ள அரசாங்கமே தற்போது இருந்துவருகிறது.

அவர்கள், அவர்களின் கொள்கைகளையே சமர்ப்பித்துள்ளார்கள். இந்நிலையில், தற்போது அதனை மேலும் தரப்படுத்திக்கொள்வதற்காகவே ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கிறார்கள். இன்னொருவரின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கும் அவற்றை நியாயப்படுத்துவதற்கும் எங்களுக்கு எந்த அவசியமும் இல்லை. உண்மையில் குறிப்பிடுவதானால், சர்வகட்சி அரசாங்கத்துக்கு இருந்த அவகாசம் தற்போது கடந்துவிட்டது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதினூடாக நாடாளுமன்றத்தின் தரம் எந்தளவுக்கு கேள்விக்குறியாகியுள்ளது என்பது புரிகிறது. நாடாளுமன்ற நடைமுறைகள் அரசியலமைப்பு ரீதியானதாக இருந்தாலும், அரசியலமைப்பின் குறைபாடுகளில் மறைந்து அதனை பயன்படுத்தி மக்களின் எண்ணங்களின்மீது தாக்குதல் நடத்தும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த செயற்பாடுகளுக்கு எதற்காகவும் எந்த காரணத்துக்காகவும் இணங்க முடியாது. நாடாளுமன்றத்துக்கு ஏற்பட்டுள்ள கேவலத்தை சரிசெய்வதற்காகவே தேதர்தலொன்றை நடத்துமாறு கோருகிறோம் - என்றார்.

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த பத்து பேர் கைது





தலைமன்னார், குருசபாடு பிரதேசத்தை அண்மித்த கடற்பரப்பில் நேற்று முன்தினம் (16) இரவு கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, டிங்கி படகை செலுத்திய இருவருடன் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் நால்வரும், பெண்கள் இருவரும், 18 வயதுக்கு குறைந்த நால்வர் உள்ளடங்கலாக 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பேசாலை, ஊருமாலே, கிளிநொச்சி மற்றும் தந்தலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் சட்ட நடவடிக்கைக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பணம் உழைக்கும் நோக்கில் வியாபாரிகளினால் பாதுகாப்பற்ற படகுகளை பயன்படுத்தி திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் சிக்கி, சட்டவிரோதமாக நாட்டிலிருந்து வெளியேற முயற்சித்து உயர் அச்சுறுத்தலை சந்திக்க வேண்டாம் என்றும் சட்டத்தின் முன்னால் குற்றவாளியாகுவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் கடற்படை கோரியுள்ளது.

# 24 கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்னுடன் போலந்து பிரஜையொருவர் சுங்கப் பிரிவினரால் கைது



இருபத்து நான்கு கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருள் தொகையுடன் போலந்து பிரஜையொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும் பிரதி சுங்கப் பணிப்பாளருமான (சட்ட நடவடிக்கைகள்) சுதந்த சில்வா தெரிவித்துள்ளார்.

கொலம்பியாவிலிருந்து கட்டார், டோஹாவுக்கு வந்து அங்கிருந்து கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சந்தேகநபர் வருகை தந்துள்ளார்.

இருந்தபோதும், அவர் எடுத்துவந்த பயணப் பொதியை கண்டுபிடிக்க முடியாததால், அந்த பயணப்பொதியை எடுத்துச்செல்வதற்காக மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்தபோது இந்த பயணப் பொதி தொடர்பில் ஏற்பட்ட சந்தேகத்தினால் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளினால் குறித்த பை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

பயன்படுத்தப்பட்ட தொலைநகல் இயந்திரத்தில் சில கடதாசி பொதிகள் இருந்துள்ளதுடன், அதில் 05 கிலோ கிராம் நிறைகொண்ட கொக்கெய்ன் போதைப்பொருள் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இதுவரையில், இந்த போதைப் பொருள் தொகை மற்றும் அதனை சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவந்த போலந்து பிரஜை கைதுசெய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளினால் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# அனுமதிப்பத்திரமின்றி எரிபொருள் ஏற்றிச்சென்ற சந்தேகநபர் கைது



(ஜூட் சமந்த)

அனுமதிப் பத்திரமின்றி 400 லீற்றர் பெற்றோலை கெப் ரக வாகனத்தினூடாக எடுத்துச் சென்று கொண்டிருந்த சந்தேகநபரொருவர் புத்தளம் பொலிஸ் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் நகரில் வைத்து நேற்று முன்தினம் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், ரத்மல்கவெவ பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸாரினால் பொறுப்பேற்கப்பட்ட கெப் ரக வாகத்தில் 200 லீற்றர் கொள்ளவு கொண்ட பிளாஸ்ரிக் பீப்பாய்கள் இரண்டில் இவ்வாறு எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளது.

புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நெல்லுக்கான புதிய விலை நிர்ணயம்

(கல்லடி நிருபர்)

ஒரு கிலோ நாட்டரிசி நெல் 120 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, சம்பா நெல் 125 ரூபா, கீரி சம்பா 130 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படும் என நெல் சந்தைப்படுத்தல் சபை அறிவித்துள்ளது.

சந்தையில் ஒரு கிலோகிராம் நெல்லின் விலை 90 ரூபாவிற்கும் குறைவாக குறைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தமையை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

முதல் கட்டமாக, அமைச்சானது ரூ. 2 பில்லியன் பெறுமதியான 30,000 மெட்ரிக் தொன் நெல்லை கொள்முதல் செய்யவுள்ளது.

# மக்களுக்கு மேலாக...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் அதிகாரத்திலிருந்து குறிப்பிட்ட சில தனிநபர்களை அகற்றுவதில் மக்களின் சக்தி முற்றுமுழுதாக கவனம் செலுத்தியது. குறிப்பிட்ட சில அரசியல்வாதிகள் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னரும் ஆளும் அதிகாரவர்க்கம் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கிறது. கெட்டவர்கள் நீக்கப்பட்ட அதேவேளை, மோசமானவர்கள் அந்த இடத்துக்கு வந்திருக்கிறார்கள்.

இது இஞ்சியைக் கொடுத்து மிளகாயை வாங்குவது என்ற சிங்கள பழமொழியை ஒத்ததாகும். ராஜபக்ஷாக்கள் பதிலீடு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அதே ஆளும் கும்பலும் அரசியல் முறைமையும் அப்படியே தொடர்ந்து - மேலும் கூடுதல் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய மறுபிறப்பாக -- இருக்கின்றன" - என்று இந்திய அரசியல் ஆய்வாளர் கலாநிதி மாயா ஜோன் எழுதியிருக்கிறார்.

பொருளாதார இடர்பாடுகள், பொருட்கள் தட்டுப்பாடு, அத்தியாவசிய தேவைகளைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசைகள் மற்றும் கடுமையான விலை அதிகரிப்பு மற்றும் சமூக சகிப்புத்தன்மையின் மட்டுப்பாடுகளின் ஒரு பிரதிபலிப்பே போராட்ட இயக்கமாகும். விலை அதிகரிப்புகள் மக்களின் வருமானத்தை உண்மையில் அரைவாசியாக்கிவிட்டது. சமுதாயத்தில் சில பிரிவினர் மற்றைய பிரிவினரையும் விட கூடுதலாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், போராட்ட இயக்கத்துக்கு எதிராக ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் நுட்பமானவையாகவும் கடுமையானவையாகவும் இருந்தன. போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர்கள் ஒவ்வொருவராக கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள் அல்லது பிணையில் விடுவிக்கப்படுகிறார்கள். மீண்டும் போராட்டத்தை நடத்த அவர்கள் துணிச்சல் கொள்ளாதிருப்பதை உறுதிசெய்யும் நோக்குடனேயே இவ்வாறு செய்யப்படுகிறது.

சடடத்தை நிலைநாட்டுவது என்ற வெளித்தோற்றத்தை காட்டிக்கொண்டு போராட்ட இயக்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்தமாத கூட்டத் தொடரின் கண்காணிப்பில் இருந்து தங்களை காப்பாற்றும் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் அரசாங்கம் நம்பிகிறது போலும்.

2018 பிற்பகுதியில் அரசியலமைப்புச் சதியொன்றை (நீதித்துறை உறுதியாக நின்றதால் அந்த முயற்சி தோல்வி கண்டது) அரங்கேற்றுவதற்கு முயற்சித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரை பலவந்தமாக விரட்டிவிட்டு அவரின் ஆசனத்தில் அமர்ந்தார்கள். கதிரைகளைத் தூக்கியெறிந்தார்கள். மைக்ரோபோன்களை பிடுங்கி வீசினார்கள். ஆனால், சதிமுயற்சி தோல்வி கண்டபோதிலும் கூட அவர்களில் எவரும் இதுவரையில் தண்டிக்கப்படவில்லை.

போராட்ட இயக்கத்தில் இணைந்து ஜனாதிபதியின் கதிரையில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதியின் பியர் குவளையை எடுத்த ஆர்ப்பாட்டக்காரர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். ஆனால், ஊழல் குற்றஞ்சாட்டப்பட்ட அரசியல்வாதிகள், குற்வாளிகளாக காணப்பட்ட அமைச்சர்கள் இன்னமும் அரசாங்கத்தில் இருக்கிறார்கள். இத்தகைய பாரபட்சமான நடவடிக்கைகள் விலைவாசி உயர்வினாலும் பொருட்கள் தட்டுப்பாட்டினாலும் கஷ்டங்களை அனுபவிக்கின்ற மக்கள் மத்தியில் அதிருப்தியை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

அரசியலமைப்புப் பேரவையில் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய சிவில் சமூகத்தவர்களை தெரிவுசெய்வதற்கான அதிகாரத்தை ஆட்சியாளர்களுக்கு வழங்கும் அரசியலமைப்புக்கான 22ஆவது திருத்தத்தின் தற்போதைய வடிவம் மக்களின் குரலுக்கு அரசாங்கம் செவிமடுக்கும் என்பதற்கான ஒரு சமிக்ஞை அல்ல. பொறுப்புக் கூற வைக்கப்படுவதையும் அதிகாரத்தை நீதியான முறையில் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை யும் ஏற்றுக்கொள்வதில் உள்ள தயக்கம் எதிர்காலத்தில் ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படுவதற்கே வழிவகுக்கும். அத்ததைய நிலை உருவாகும்போது மக்களைப் பொருட்படுத்தாமல் அடக்குமுறையை கட்டவிழ்த்துவிடுவதே ஆட்சியாளர்களின் பதிலாக இருக்கும்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கின்றபோதிலும், இராணுவ பட்ஜெட்டுக்கு ஏன் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ள முடியும். புதிய தேர்தல்கள் ஊடாக மாத்திரமே வரக்கூடிய நாடாளுமன்றத்திலும் அரசியல் செயன்முறைகளிலும் மக்கள் குரல் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத பட்சத்தில் ஆட்சிமுறைமையில் பொறுப்புக்கூறலை எதிர்பார்ப்பது கஷ்டமேயாகும். இது விரைவில் அனர்த்தத்துக்கே வழிவகுக்கும்.




# மொஹமட் நபி தலைமையில் ஆப்கான் அணி அறிவிப்பு




ஆறு அணிகள் பங்கேற்கும் 2022ஆம் ஆண்டுக்கான ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 27ஆம் திகதிமுதல் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகும் நிலையில், அதற்கான ஆப்கானிஸ்தான் அணியின் 17 பேர் அடங்கிய குழாம் வெளியானது. சகலதுறை வீரர் மொஹமட் நபி தலைமையில் ஆப்கானிஸ்தான் அணி ஆசியக்கிண்ணத் தொடரில் களமிறங்குகிறது.

குறித்த குழாமில் ஷராபுதீன் அஷ்ரப்புக்கு பதிலாக சமியுல்லா ஷின்வாரி சேர்க்கப்பட்டுள்ளார். சுழற்பந்து வீச்சாளரான இளம் வீரர் நூர் அஹமட்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஷின்வாரி கடைசியாக 2020 மார்ச்சில் அயர்லாந்துக்கு எதிரான ரி20 போட்டியில் ஆப்கானிஸ்தானை பிரதிநிதித்துவப்படுத்தினார். குழாமில் ரஷீட் கான், ஹஸ்ரத்துல்லா ஜசாய், நஜிபுல்லா சத்ரான் மற்றும் முஜீப் உர் ரஹ்மான் போன்ற ஏனைய வழக்கமான வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

மொஹமட் நபி தலைமையிலான ஆப்கானிஸ்தான் அணி எதிர்வரும் 27ஆம் திகதி டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இலங்கைக்கு எதிராக தங்களது முதல் போட்டியில் களமிறங்குகிறது. இதுவரையில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் குழாம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அயர்லாந்தின் முக்கிய தூண் ஒன்று சரிந்தது




ஐ.சி.சி. உலகக்கிண்ணக் கிரிக்கெட்டில் அதிவேக சதம் அடித்த அயர்லாந்து கிரிக்கெட் அணியின் நட்சத்திர சகலதுறை வீரர் கெவின் ஓ பிரையன் தனது 38ஆவது வயதில் சர்வதேச கிரிக்கெட் அரங்கிற்கு விடைகொடுத்துள்ளார்.

அயர்லாந்து கிரிக்கெட் அணியின் வளர்ச்சியில் மிக முக்கிய பங்குவகித்த கெவின் ஓ பிரையன் 2006ஆம் ஆண்டு சர்வதேச போட்டியில் அறிமுகமானார். அந்த அணியின் நட்சத்திர வீரராக வலம் வந்த அவர் 3 டெஸ்டில் ஆடி ஒரு சதம் உட்பட 258 ஓட்டங்களும், 153 ஒருநாள் போட்டியில் 2 சதம் உட்பட 3,619 ஓட்டங்களும், 110 இருபது ஓவர் போட்டியில் ஒரு சதம் உட்பட 1,973 ஓட்டங்களும் எடுத்துள்ளார். ஒருநாள் போட்டியில் 114 விக்கெட்டும், 20 ஓவர் போட்டியில் 58 விக்கெட்டும் வீழ்த்தியிருக்கிறார்.

இந்நிலையில், 38 வயதான கெவின் ஓ பிரையன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விடைபெறுவதாக நேற்று முன்தினம் அறிவித்தார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் பதிவில், அவுஸ்திரேலியாவில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் 20 ஓவர் உலகக்கிண்ணத் தொடருடன் எனது கிரிக்கெட் வாழ்க்கையை நிறைவுசெய்ய விரும்பினேன். ஆனால், கடந்த ஆண்டு நடந்த உலகக்கிண்ணப் போட்டிக்குப் பிறகு நான் அணிக்கு தெரிவுசெய்யப்படவில்லை. அணி நிர்வாகம் வேறு திட்டத்தை வைத்திருப்பதாக உணர்கிறேன்.

நாட்டுக்காக களம் கண்ட ஒவ்வொரு வினாடியையும் உற்சாகமாக அனுபவித்து விளையாடினேன். எனது வாழ்க்கையில் அடுத்த கட்டத்துக்கு நகர இது சரியான தருணமாகும். எனக்கு சொந்தமான பயிற்சி அகடமியை தொடர்ந்து மேம்படுத்த ஆசைப்படுகிறேன் -. எனக் குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# சம்பியனான அல்-அஸார் விளையாட்டுக் கழகம்

(கல்குடா நிருபர்)






ஓட்டமாவடி காவத்தமுனை அல்-அஸார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் காவத்தமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற அல்-அஸார் வெற்றிக் கிண்ணத்தின் இறுதிப்போட்டியில் அல்-அஸார் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

நான்கு அணிகள் பங்குபற்றிய இந்தத் தொடரின் இறுதிப்போட்டிக்கு அல்-அஸார் விளையாட்டுக் கழகம் மற்றும் மில்லத் விளையாட்டுக் கழகம் ஆகிய இரு கழகங்களும் தெரிவுசெய்யப்பட்டன.

இதில் அண்மையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் காவத்தமுனை அல்-அஸார் விளையாட்டுக் கழகம் வெற்றியை தனதாக்கிக் கொண்டது. அல்-அஸார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஆர். கலீலுர் ரஹ்மான் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில் சட்டத்தரணி ஹபீப் றிபான், அல்-அஸார் விளையாட்டுக் கழக முகாமையாளர் ஏ.கே.எம்.சர்ஜுன், அல்-அமீன் பாடசாலை அதிபர் எம்.அலியார், முன்னாள் அதிபர் ஏ.ஜி.பிர்தௌஸ், உதவும் உள்ளங்கள் அமைப்பின் உறுப்பினர்கள், கல்குடா செலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக நிர்வாகத் தலைவர் மற்றும் ஊர்ப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வெற்றிபெற்ற கழகத்திற்கும் சிறந்த ஆட்ட நாயகர்களுக்கும் வெற்றிக் கிண்ணங்கள் கலந்துகொண்ட அதிதிகளால் வழங்கப்பட்டன.

# இலங்கை லெஜெண்ட்ஸ் அணியில் இணைந்த பல புதிய முகங்கள்



சர்வதேச கிரிக்கெட் உலகிலிருந்து ஓய்வுபெற்ற வீரர்கள் பங்கேற்கும் வீதி பாதுகாப்பை மையப்படுத்தி இந்தியாவில் நடைபெறும் ரோட் சேஃப்டி வேல்ட் சீரீஸ் கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் நடைபெறுகின்ற நிலையில், அதில் பங்கேற்கும் இலங்கை லெஜெண்ட்ஸ் அணியில் பல புதிய வீரர்கள் இணைந்துள்ளனர். அதன்படி அசேல குணரட்ன, டில்ஷான் முனவீர, டில்ருவன் பெரேரா, மஹேல உடவத்த ஆகியோர் புதிதாக இணைந்துகொண்டுள்ளனர்.

திலகரட்ன டில்ஷான் தலைமையிலான இலங்கை லெஜெண்ட்ஸ் அணியின் உதவித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சனத் ஜயசூரிய, அணி பயிற்றுநராகவும் செயற்படவுள்ளார். இலங்கை லெஜெண்ட்ஸ் அணியில் கடந்த வருடம் விளையாடிய உப்புல் தரங்க, நுவன் குலசேக்கர, தம்மிக்க பிரசாத், அஜந்த மெண்டிஸ், மலிந்த வர்ணபுர, ரசல் ஆர்னல்ட், கௌஷல்ய வீரரட்ன, சாமர கப்புகெதர ஆகியோர் இந்த வருடமும் தொடர்ந்து விளையாடவுள்ளனர்.

இந்திய லெஜெண்ட்ஸ், அவுஸ்திரேலிய லெஜெண்ட்ஸ், இலங்கை லெஜெண்டஸ், மேற்கிந்தியத் தீவுகள் லெஜெண்ட்ஸ், தென்னாபிரிக்க லெஜெண்ட்ஸ், பங்களாதேஷ் லெஜெண்ட்ஸ், இங்கிலாந்து லெஜெண்ட்ஸ், நியூஸிலாந்து லெஜெண்ட்ஸ் ஆகிய 8 அணிகள் இம்முறை போட்டியிடுகின்றன.

முதலாம் கட்டமாக லக்னோவில் செப்டெம்பர் 10 முதல் 15 வரை 7 போட்டிகள் நடைபெறும். இரண்டாம் கட்டமாக ஜோத்பூரில் செப்டெம்பர் 16 முதல் 19 வரை 5 போட்டிகள் நடத்தப்படும். கட்டாக்கில் செப்டெம்பர் 21 முதல் 25 வரை 3ஆம் கட்டமாக 6 போட்டிகள் நடத்தப்படும். கடைசிக் கட்டமாக ஹைதராபாத்தில் செப்டெம்பர் 27 முதல் அக்டோபர் 2 வரை 10 போட்டிகளும் அதனைத் தொடர்ந்து இறுதிப்போட்டியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முச்சக்கரவண்டி விபத்தில் மூவர் படுகாயம்



(மீராவோடை நிருபர்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி மின்கம்பத்தில் மோதியதில் முச்சக்கரவண்டியில் பயணித்த மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் பிரதான வீதியில் வைத்தே இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் (16) இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த குடும்பத்தினர் ஓட்டோவில் கல்முனைக்குச் சென்று திரும்பும் போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்தில் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதோடு, மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுபோக நெற்செய்கையில் விளைச்சல் குறைவு

**கல்மெட்டியாவ விவசாயிகள் கவலை**

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மெட்டியாவ பகுதியில் சிறுபோக வேளாண்மை அறுவடை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



சுமார் 650 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மை செய்கையானது தற்பொழுது அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் பசளை கிருமிநாசினி கிடைத்தனால் அமோக விளைச்சல் ஏற்பட்டது. இச்சிறுபோகத்தில் கிருமிநாசினி பசளை கிடைக்காததனால் விளைச்சல் குறைவாகவே கிடைத்தது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் 40 - 50 பேக் ஒரு ஏக்கருக்கு கிடைத்தது. இப்பசளை கிருமிநாசினி இன்மையால் 10 -15 பேக்குகளே கிடைக்கின்றன. யூரியா பசளை இல்லாத காரணமே விளைச்சல் குறைவுக்கு காரணமாகும்.

எண்ணெய் பிரச்சினை அதாவது, டீசல் இல்லாத காரணமாக நெல் அறுவடை செய்வதிலும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அடுத்த போகத்திலாவது பசளை கிருமிநாசினிகளை தந்து உதவுமாறு வேண்டுகிறோம்

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முப்பெரும் திறப்புவிழா!









(நூருள் ஹுதா உமர், எம்.என்.எம்.அப்ராஸ்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் முப்பெரும் திறப்புவிழா நிகழ்வு நேற்று (17) கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வின் முக்கிய அங்கமாக உலக வங்கியின் நிதிப்பங்களிப்புடன் வடிவமைக்கப்பட்ட AHEAD நிகழ்ச்சித் திட்டத்தினூடாக கலை, கலாசார பீடத்தில் கட்டிமுடிக்கப்பட்ட மாணவர் செயற்பாட்டு மையம் உபவேந்தரினால் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. குறித்த AHEAD நிகழ்ச்சித் திட்டத்தினூடாக தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடம் 120 மில்லியன் ரூபா நிதி உதவியினைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சகல வசதிகளுடன் கூடியதாக அமைக்கப் பட்டுள்ள மாணவர் செயற்பாட்டு மையத்தில் இளம்கலை மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கான ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளதுடன், தொழில்வழிகாட்டல் அலகு, சமூக நல்லிணக்க மையம், மாணவர் பிரத்தியேக நூலகம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. AHEAD நிகழ்ச்சித் திட்டத்தினூடாக மாணவர் மையத்திற்காக சுமார் 15 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

கலை, கலாசார பீடத்தின் சகல கற்கைத்துறை களுக்கும் தனியான நூலகத்தை அமைப்பதற்கும் AHEAD நிகழ்ச்சித் திட்டத்தினூடாக நிதியுதவி அளிக்கப்பட்டது. இதன்படி சுமார் 2 மில்லியன் ரூபா செலவில் கலை, கலாசார பீடத்தின் 08 துறைகளிலும் பிரத்தியேக நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கான நூல்கள், தளபாடங்கள் போன்றனவும் திட்டத்தினூடாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நூலகங்களும் நேற்று உபவேந்தரினால் திறந்துவைக்கப்பட்டு குறித்த துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

மேலும், நிகழ்ச்சித் திட்டத்தினூடாக மாணவர்களின் ஆங்கில மொழியாற்றல், கணினி அறிவு என்பவற்றினை மேம்படுத்து வதற்காக சுமார் 18.6 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதில் விரிவுரை மண்டபங்களை டிஜிட்டல் மயப்படுத்துவதற்காக 8.6 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு, விரிவுரை மண்டபங்களில் ஸ்மார்ட்போட், எல்.ஈ.டீ. திரைகள் என்பனவும் பொருத்தப்பட்டு விரிவுரை மண்டபங்கள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. கலை, கலாசார பீடத்தின் இணைய வழிமூலமான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக தனியான தரவுத்தள சேமிப்பகம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

கலை, கலாசார பீடத்தினால் வழங்கப்படுகின்ற பட்டப்பின்படிப்புக் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கான பட்டப்பின்படிப்பு கற்கை அலகும் உபவேந்தரினால் திறந்துவைக்கப்பட்டது. இவ்வலகினால் முதுமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி கற்கைகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் சுமார் 12 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்புடன் கலை, கலாசார பீடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளும் விருத்திசெய்யப்பட்டுள்ளன. இந்நிதியுதவியின் கீழ் நிறைவுசெய்யப்பட்ட திட்டங்களும் உபவேந்தரினால் திறந்துவைக்கப்பட்டு பீடாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இம்முப்பெரும் திறப்புவிழா நிகழ்வில் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் பொறியியலாளர் என்.டீ.சிராஜுதீன் பதிவாளர் எச்.அப்துல் சத்தார், பிரதிப் பதிவாளர் எம்.ஐ.நௌபர், வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி கலாநிதி ஏ.சபீனா எம்.ஜீ.ஹசன், தொழில்நுட்பப் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.மஜீத், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், பதில் நிதியாளர் வன்னியாராச்சி, சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட உதவிப் பதிவாளர்கள், பல்கலைக்கழக உலக வங்கி நிதித்திட்டங்களின் பொறுப்பாளர் பேராசிரியர் எம்.ஏ.எம். றமீஸ், பல்கலைக்கழகப் பொறியியலாளர் எம்.எஸ்.எம்.பஷீல், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.டீ.ஏ.அஸ்ஹர், கலை, கலாசார பீடத்தின் நிகழ்த்திட்ட ஒருங்கிணைப்பாளர் பௌசுல் கரீமா, குறித்த செயற்றிட்டங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளர்கள், பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்லாக்காசு

## கதிரைகளுக்கு ஆசைப்பட்டு அரசுக்கு ஆதரவான அவர்களை நம்பமாட்டோமென அச்சங்கத்தின் தலைவி காட்டம்

(பாறுக் ஷிஹான்)

காணாமலாக்கப்பட்டோரின் போராட்டத்தை மழுங்கடிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதில் அவர்களுக்கு இலாபம் உண்டு. காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளிடம் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏமாற்றி வருகின்றார்கள். செல்லாக்காசான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இவ்விடயத்தில் தினமும் நம்பி நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை தற்போது உணர்ந்துள்ளோம் - என அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் நேற்று (17) நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

அம்பாறை மாவட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டமானது எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை நிலை தெரியும்வரை தொடரவுள்ளது. 138 பேரை அம்பாறை மாவட்டத்தில் இழந்திருக்கின்றோம். அது மட்டுமல்ல, காணாமல்போனோரின் அலுவலகத்தை நாங்களும் 8 மாவட்டத்தைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளும் வேண்டாம் என்று உறுதியாக நிற்கின்றோம்.

இருந்தபோதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் காணாமலாக்கப்பட்டோருக்கான காரியாலயம் வேண்டும் என்று கூறுவதற்கு காரணம் என்ன? இன்று உறவுகளை இழந்து தவித்த 8 மாவட்டங்களைச் சேர்ந்த நாங்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். அவர்கள் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்) இச்செயலில் இறங்குவதானது எமக்கு மனவருத்தத்தை தருவதுடன் ஆத்திரமடைகின்றோம்.

அது மட்டுமல்ல, இந்நாட்டில் இறுதி யுத்தத்தின்போது மனித உரிமை மீறல்கள் மற்றும்



வலிந்து காணாமலாக்கப்பட்டமையை தொடர்ந்து இலங்கை பொறிமுறையில் நம்பிக்கை இல்லாத காரணத்தினால்தான் நாங்கள் இன்று அனைத்து உலக சர்வதேசத்தை நாடியிருக்கின்றோம். அதற்கான காரணத்தையும் ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் கூறியிருக்கின்றோம். இந்த உள்ளக பொறிமுறை விசாரணையை ஏன் விரும்பவில்லை என்ற காரணத்தையும் அங்கு தெளிவாகக் கூறியுள்ளோம். ஒன்றுமில்லாத காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் (ஓ.எம்.பி.) ஒன்றினை எம்மிடையே திணிக்க இலங்கை அரசு பார்த்தது. ஒன்றுமே இல்லாத அலுவலகம் என்பதனால் நாங்கள் இன்று வெறுத்திருக்கின்றோம்.

இவ்வாறான அலுவலகங்களை எல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னின்று ஊக்குவிப்பதற்கான காரணம் என்ன? இன்று அவர்களது கதிரைகளை தக்கவைத்துக்கொள்ளவா?

அடுத்த தேர்தலுக்கு தங்களை தயார்ப்படுத்திக்கொள்வதற்கா? என்பது எங்களுக்கு கேள்விக்குறியாகவே உள்ளது. ஆகவே, எங்களது விடயத்தில் தயவுசெய்து மூக்கை நுழைக்க வேண்டாம். எங்களுக்கு விடுதலையை பெற்றுத்தர விரும்பியிருந்தால் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் எங்களது உறவுகளுக்கான நீதி கிடைத்திருக்கும். ஆனால், நீங்கள் கதிரைகளுக்கு ஆசைப்பட்டு, அரசுடன் சேர்ந்து உழைக்கின்றீர்கள்.

எதிர்வரும் 9ஆம் மாதம் ஜெனீவா கூட்டத்தொடரில் எமக்கான நீதி கிடைக்கும் என நம்புகின்றேன். இன்று அரசாங்கத்துடன் இணைந்து எங்களது காணாமலாக்கப்பட்டோரின் போராட்டத்தை மழுங்கடிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதில் அவர்களுக்கு இலாபம் உண்டு. காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளிடம் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏமாற்றி வருகின்றார்கள்.

செல்லாக் காசான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இவ்விடயத்தில் தினமும் நம்பி நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை தற்போது உணர்ந்துள்ளோம். எனவேதான் கூட்டமைப்பினர் எதுவுமே செய்யாமல் ஏமாற்றுபவர்கள் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன் - என்றார்.

# அறுவைக்காக திருடப்பட்டிருந்த இரண்டு மாடுகள் மட்டக்களப்பில் மீட்பு

(மண்முனை நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பொலிஸ் பிரிவில் திருடப்பட்டு இறைச்சிக்காக கொண்டுசென்ற மாடுகள் நேற்று முன்தினம் (16) பிற்பகல் மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பிரதேசத்திலுள்ள சின்னகால போட்டமடு பகுதியில் மேய்ச்சலுக்காக விடப்பட்டிருந்த இரண்டு பசு மாடுகளை அப்பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் திருடி மாட்டு வியாபாரிக்கு குறைந்த விலைக்கு விற்றுள்ளார்.

இம்மாடுகள் காத்தான்குடி பகுதியில் அறுவைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில், இரகசியத் தகவலுக்கு அமைவாக பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுணதீவு பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவின் உதவிப் பொலிஸ் பரிசோதகர் விக்கிரமசிங்க தலையிலான பொலிஸாரின் நடவடிக்கையினால் இரண்டு மாடுகளை மீட்டதுடன், சந்தேகத்தின்பேரில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மாடுகளையும் ஐந்து சந்தேகநபர்களையும் நேற்று (17) மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



புலம்பெயர்ந்து வருபவர்களுக்காக தனியான கந்தோர் ஒன்று கொழும்புல துறக்கப்போறாராம் நரில் ஐயா. சோக்கான கதயாத்தான் இருக்கு. கொழும்பு மட்டுமல்ல, வடக்கு - கிழக்கு இணைந்த தனியான ஒரு கட்டமைப்பு வேணும் எண்டு கூட்டமைப்பு எம்.பிமார் கேக்கிற விசயத்தையும் ஒள்ளுப்பம் செய்தா நல்லம் எலுவா?
ஆனா நம்மட ஆக்களுக்கு புலம் பெயர்ந்தாலும் புலன் பெயராம இருந்தா சரி..!

# மட்டக்களப்பு நெலுகல தொல்பொருள் நிலையத்தில் மேற்கொண்ட அகழ்வுப்பணியின் அறிக்கை சமர்ப்பிப்பு





(கிண்ணியா நிருபர்)

மத்திய கலாசார நிதியத்தினால் மட்டக்களப்பு நெலுகல தொல்பொருள் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப்பணியின் அறிக்கை, தேசிய பாரம்பரிய, கலை மற்றும் கிராமிய கலை இராஜாங்க அமைச்சில் நேற்று முன்தினம் (16) சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஆகியோரிடம் வழங்கினார்.

தொல்பொருள் தளத்திலுள்ள பழைய கட்டிடங்கள், தொட்டிகள், ஸ்தூபிகள் மற்றும் ஆசனகாரங்கள் உட்பட தொல்பொருள் மதிப்புள்ள பல தகவல்கள் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

கோறளைப்பற்று மேற்கு பிராந்திய செயலகத்திற்குட்பட்ட வடமுனை கிராம சேவை களத்தில் அமைந்துள்ள நெலுகல தொல்பொருள் தளம் 2000 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது.

அதற்கமைவாக, தற்போது முன்னெடுக்கப்படும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும் என அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இங்கு தெரிவித்தார்.

மேலும், தொல்லியல் துறைக்கு சொந்தமான காணியை இரண்டு வாரங்களுக்குள் பிரித்து வழங்குமாறும் நிகழ்வில் கலந்துகொண்ட தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்கவுக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, தொல்பொருள் இடத்தைப் பாதுகாத்து, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வழிபடுவதற்குத் தேவையான இடத்தை விரைவில் தயார் செய்யுமாறு மாகாண ஆளுநர் அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வணக்கத்திற்குரிய கடகும்புரே தம்மாராம தேரர், இராஜாங்க அமைச்சர் திருமதி நிஷாந்தி ஜயசிங்க மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# மட்டுநகர் லொயிஸ் அவனியூர் வீதியில் சடலமாக மீட்கப்பட்டவர் தாக்குதலினால் உயிரிழப்பு

## பிரேத பரிசோதனை அறிக்கையில் அம்பலம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரில் ஆணொருவர் வீதி ஓரத்தில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தில் அவரின் மண்டையில் ஏற்பட்ட தாக்குதலில் இரத்தம் கசிந்து உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 11ஆம் திகதி மட்டுநகர் லொயிஸ்அவனியூர் வீதியிலுள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றிற்கு அருகில் முனைத்தீவு பெரியபோரதீவு களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 53 வயதுடைய வல்லிபுரம் அன்பழகன் என்பவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து 12ஆம் திகதி குறித்த சடலத்தை அவரது மனைவி அடையாளம் காட்டிய நிலையில், இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான விசாரணையில் சிசிரிவி கெமரா ஒன்றை சோதனையிட்டபோது அதில் உயிரிழந்தவரை இருவர் மோட்டார்சைக்கிள் ஒன்றில் வந்து இரு தடவைகள் பொல்லால் தாக்கும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக நகர்ப்பகுதியைச் சேர்ந்த 22, 21 வயதுடைய இரு இளைஞர்களை கடந்த 13ஆம் திகதி சந்தேகத்தில் கைதுசெய்ததுடன் மோட்டர்சைக்கிள் ஒன்றையும் மீட்டனர். அத்தோடு இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மீட்கப்பட்ட சடலம் மட்டு. போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை 15ஆம் திகதி பிரேத பரிசோதனையில் அவரின் தலைமீது பொல்லால் தாக்கியதில் மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவினால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதையடுத்து சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த நபர் மதுபோதைக்கு அடிமையாகியதுடன் மனைவியை பிரிந்து அவரது தாயாருடன் வாழ்ந்து வந்ததுடன், வவுணதீவு பிரதேசத்தில் நகைக்கடை ஒன்றில் வேலைபார்த்து வந்ததாகவும் தெரியவருகிறது.

# கிண்ணியாவில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(சீனாக்குடா நிருபர்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியாற்றுமுனை பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த ஒருவர் திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவால் நேற்று (17) கைதுசெய்யப்பட்டு, கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

கைதான நபர்களிடமிருந்து 21 கிராம் நிறைகொண்ட ஹெரோயின் பொதி ஒன்று கைப்பற்றப்பட்டதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். கிண்ணியா, பெரியாற்றுமுனை ஜாவா வீதியைச் சேர்ந்த 28 வயதான குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

இவர் நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர் என விசாரணையின்போது தெரியவந்துள்ளதாகவும், இதுதொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் 6ஆவது தடவையாக இடம்பெற்ற ஸலாமா பௌன்டேஷனின் இரத்ததான முகாம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஸலாமா பௌன்டேஷனின் ஏற்பாட்டில் 'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் 6ஆவது தடவையாக மேற்கொள்ளப்படும் இரத்ததான முகாம் நேற்று (17) மிகச்சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் பள்ளிவாசலில், பள்ளிவாசலின் தலைவர் எம்.எச்.எம்.சியாம் தலைமையில் இடம்பெற்ற குறித்த இரத்ததான முகாமிற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்துகொண்டு குறித்த இரத்ததான முகாமை ஆரம்பித்துவைத்துள்ளார்.

பள்ளிவாசலின் மௌளவி எச்.எம்.நியாஸ் ஹிராத் ஓதலுடன் ஆரம்பிக்கப்பட்ட இரத்ததான முகாமில் அதிதிகளின் விசேட உரைகள் இடம்பெற்றதனைத் தொடர்ந்து குருதிக்கொடையாளர்களினால் இரத்ததானம் வழங்கப்பட்டது.

குறித்த இரத்ததான முகாமிற்கு ஆன்மீக அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட சர்வமத



ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ வீ.கே.சிவபாலன் குருக்கள், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரும் அருட்தந்தையுமான நவரெட்ணம் நவாஜி அடிகளாரும் கலந்து சிறப்பித்ததுடன், விசேட அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் எம்.பி.மதன், மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் எம்.மதிவண்ணன், மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, எம்.வீ.எம்.பிறிதோஸ் நளினி, மாவட்ட ஊடக அதிகாரி வீ.ஜீவானந்தன், மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் செயலாளர் தியாகராஜா, பள்ளிவாசலின் செயலாளர் அமீன் நளினி உள்ளிட்ட மேலும் பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்தியர் தியாகராஜா தவனேசன் தலைமையிலான இரத்த வங்கியின் உத்தியோகத்தர் குழாம் இரத்தக் கொடையாளர்களிடமிருந்து இரத்தத்தை சேகரிக்கும் பணியினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் பள்ளிவாசலில் கீழ் இயங்கிவருகின்ற ஸலாமா பௌன்டேஷனானது, கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பில் சமூக சமயங்களுக்கிடையிலான ஒற்றுமையை மேம்படுத்துவதற்காக செயற்பட்டுவரும் ஓர் அமைப்பாக திகழ்ந்துவருவதுடன், இம்முறை 6ஆவது தடவையாக இந்த இரத்த தானப் பணியை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இறக்காமம் முதியோர் சங்கங்களுக்கு தளபாடங்கள் வழங்கிவைப்பு

(மாளிகைக்காடு நிருபர்)



இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் 03 முதியோர் சங்கங்களுக்கு தலா ஒரு இலட்சம் பெறுமதியான காரியாலய தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இங்கு உரையாற்றிய அதிகாரிகள்,

தேசிய செயலகத்தினால் கிராமிய முதியோர் குழுக்கள், மாகாண முதியோர் சபைகள், மாவட்ட முதியோர் சபைகள் ஆகியவற்றைப் பதிவுசெய்தல், நாட் காப்பக நிலையங்களுக்கு நிதியுதவியளித்தல், மனோநிலை மற்றும் ஆன்மீக விருத்திகளை மேம்படுத்த உளவியல் ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், முதியோர் காப்பாளர்களைப் பயிற்றுவித்தல் போன்ற பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனூடாக முதியோர் தனிமையான வாழ்க்கையை நடத்துவதைத் தடுப்பதும், சமூகத்தில் அவர்களின் பங்குபற்றலை மேம்படுத்தலும் முக்கிய நோக்கமாகும்.

நாட்டில் அரசினூடாக பேணப்பட்டுவரும் 06 முதியோர் இல்லங்கள் உள்ளதுடன், ஏனைய தன்னார்வ அமைப்புகள் மற்றும் அறக்கொடை நிறுவனங்களினூடாக பராமரிக்கப்படும் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை 300 ஆகும். அதன் பிரகாரம் மொத்த முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை 306 ஆகும். முதியோர்களுக்கென காணப்படும் அதிக கவனத்துடன் நிலையங்களில் மேற்குறிப்பிட்ட அனைத்து முதியோர்களுக்குப் பாதுகாப்பை வழங்கும் எண்ணிக்கையை அதிகரிக்கும் தேவை காணப்படுகின்றது.

முதியோர் இல்லங்களில் வாழும் முதியோர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 7,500 ஆகும். அதற்கும் மேலாக 281 பிரதேச அதிகாரசபைகள் காணப்படுவதுடன், தேசிய அதிகாரசபையும் அமுல்படுத்தப்படுகின்றது. இவ்வாறாக முதியோர்கள் தொடர்பில் நிறைவேற்றப்படும் சேவைகளுக்காக உதவியை வழங்கி முதியோர் சமுதாயத்திற்காக தன்னார்வத்துடன் அர்ப்பணித்துள்ள சேவைகளை வழங்குவதற்குத் தேவையான அரச தலையீடுகளும் நடைபெற்று வருகின்றன - என்று தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் இறக்காமம் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல், கிராம சேவக நிர்வாக உத்தியோகத்தர் எச்.பி.இந்திர ஸ்ரீ யசரட்ன, சமூக சேவைப் பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.யஹ்யால், கிராம உத்தியோகத்தர்களான யூ.எல்அமீர், எஸ்.எல்.ஹம்சா எம்.ஜே.எம்.அத்தீக் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# இலங்கை கடற்படை ஹெலியில் ரோந்து

## அதிர்ச்சியில் இராமேஸ்வரம் மீனவர்கள்

இலங்கை கடற்படை வீரர்கள் ஹெலிகொப்டரில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டதால் இராமேஸ்வரம் மீனவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

ஒகஸ்ட் 15ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து 600 விசைப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் வழக்கம்போல் இந்திய - இலங்கை எல்லையில் மீன்பிடித்துக்கொண்டிருந்தவேளை, நேற்று மாலை தலைமன்னாரிலிருந்து ஹெலிகொப்டரில் கடற்படை வீரர்கள் ரோந்து சுற்றினர். இதனைக் கண்ட மீனவர்கள் பீதியடைந்தனர்.

அடுத்த சில நிமிடங்களில் இரு ரோந்து கப்பல்களில் வந்த கடற்படையினர் துப்பாக்கியை காட்டி எச்சரித்து மீனவர்களை மீன் பிடிக்கவிடாமல் விரட்டினர். இதனால் 50இற்கும் மேற்பட்ட படகுகளிலிருந்த மீனவர்கள் கடலில் இழுத்துவந்த வலையை வெட்டி மூழ்கடித்துவிட்டு வெறும் படகுகளுடன் கரை திரும்பியுள்ளனர். மற்றவர்களுக்கு காரல் உள்ளிட்ட மீன்கள் கிடைத்தன.

இது குறித்து இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவிக்கையில்,

''முதன்முறையாக பாக்குநீரிணை கடலில் இலங்கை கடற்படையினர் ஹெலிகொப்டரில் ரோந்து சுற்றியது எங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இவர்கள் அளித்த தகவல்படி ரோந்து கப்பலில் வந்த வீரர்கள் எங்களை விரட்டினர். சூறாவளி மீன்பிடி தடையால் 12 நாட்களுக்குப் பின் மீன்பிடிக்கச் சென்றும் வருவாயின்றி நஷ்டம் ஏற்பட்டது'' - என்றனர்.



## இலங்கையை வந்தடைந்த சீன உளவுக் கப்பல் 'யுவான் வான்-5'

# தீவிர கண்காணிப்பில் தமிழக கடலோரப் பகுதிகள்

## பாக்குநீரிணை - மன்னார் வளைகுடா பகுதிகளில் 8 கப்பல்கள் - 2 விமானங்கள் - 3 ஹெலிகள் ரோந்து

சீன உளவுக் கப்பல் 'யுவான் வான்-5' இலங்கையை வந்தடைந்துள்ள நிலையில், தமிழக கடலோரப் பகுதிகளில் தீவிர காண்காணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம், தனுஷ்கோடி உள்ளிட்ட கடற்பகுதி முழுவதும் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், பாக்குநீரிணை, மன்னார் வளைகுடா கடற்பகுதியில் இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல்படைக்குச் சொந்தமான 8 கப்பல்கள், 2 விமானங்கள், 3 ஹெலிகொப்டர்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ''ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை இராணுவ நோக்கத்திற்காக சீனா பயன்படுத்த ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இலங்கைக்கு வந்துள்ள கப்பலுக்கு, 'ஆய்வுக் கப்பல்' என்பதன் அடிப்படையிலேயே அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது'' எனவும் அவர் விளக்கமளித்துள்ளார்.


சீன இராணுவத்திடமுள்ள 7 உளவுக் கப்பல்களில் ஒன்றான 'யுவான் வாங்-5' பல்வேறு நவீன வசதிகளைக்கொண்டதாகும். 750 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இடங்களைக் கண்காணிப்பதுடன், செயற்கைக்கோள்கள், ஏவுகணைகளையும் ஆய்வுசெய்ய முடியும்.

இந்தக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில், இலங்கை அரசு ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வர பாதுகாப்பு அனுமதியை அளித்தது. இதையடுத்து நேற்றுமுன்தினம் காலை யுவான் வாங்-5 கப்பல் அங்கு நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டது.

சீன உளவுக் கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஒருவாரம் நிற்கும் என்பதால், தென் இந்தியாவிலுள்ள இராணுவ நிலையங்கள், அணுமின் நிலையங்களைக் கண்காணிக்கும் அபாயமுள்ளது. அதனால் தமிழக கடலோரப் பகுதிகளில் தீவிர காண்காணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# உலக செய்திகள்

## அமெரிக்காவின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை வெற்றி



கண்டம் விட்டு கண்டம் பாயும் நீண்ட தூர அணுஆயுதங்களை தாங்கிச் சென்று தாக்கும் மினிட்மேன்-3 ஏவுகணை சோதனையை அமெரிக்கா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை மற்றும் நான்சி பெலோசியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தாய்வானை சுற்றி ஏவுகணை சோதனை மற்றும் இராணுவப் பயிற்சிகளை சீனா மேற்கொண்ட நிலையில், பதற்றத்தைத் தூண்டுவதைத் தவிர்ப்பதற்காக ஏவுகணை சோதனையை அமெரிக்கா இருமுறை இரத்துசெய்தது.

இந்நிலையில், கலிபோர்னியாவின் வாண்டன்பெர்க் விண்வெளிப் படைத்தளத்திலிருந்து பசுபிக் கடற்பகுதியில் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்க விமானப்படை அறிவித்துள்ளது. இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி, பொறுப்புள்ள அணுசக்தியின் நடத்தையை அமெரிக்கா வெளிப்படுத்துகிறது என்று தெரிவித்துள்ளார்.

## கொதிக்கும் நெய் சட்டிக்குள் கரண்டிக்கு பதில் கைகளை விட்டு வடை சுட்ட மூதாட்டி



திருவண்ணாமலையில் 60 வயது மூதாட்டியொருவர் கொதிக்கும் நெய் சட்டியில் கைகளை விட்டு வடை சுட்டு நேர்த்திக்கடன் செலுத்தியுள்ளார்.

திருவண்ணாமலையிலுள்ள செ.அகரம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சந்தியம்மன் கோவில் திருவிழாவில் சந்தி அம்மாள் என்ற பெண் பக்தர் இவ்வாறு நேர்த்திக்கடனை செலுத்தினார்.

கரண்டியை பயன்படுத்தாமல் வெறும் கைகளை கொதிக்கும் நெய் சட்டியில் விட்டு அவர் நேர்த்திக்கடன் செலுத்தியதை ஏராளமான பக்தர்கள் பக்தி பரவசத்துடன் பார்த்தனர்.

## கிரீமியாவிலுள்ள ரஷ்ய இராணுவ ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறியது

ரஷ்ய கட்டுப்பாட்டிலுள்ள கிரீமியா பகுதியில் ரஷ்ய இராணுவத்துக்குச் சொந்தமான ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறியது.

ஜோன்கோய் பகுதியிலுள்ள ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறியதற்கு உக்ரைன் காரணமாக இருக்கலாம் என ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. அப்பகுதியிலிருந்து இரண்டாயிரம் பேர் வெளியேற்றப்பட்ட நிலையில், ரயில் போக்குவரத்து தடைப்பட்டது.

### எல்லையில் பதற்றம்:

## சீனாவுக்கு இந்தியா பதிலடி; நவீனமாகும் இராணுவம்





கிழக்கு லடாக் எல்லையில் சீனாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் உள்நாட்டில் தயாரான ட்ரோன், தாக்குதல் படகு, போர் வாகனம், தானியங்கி தகவல் தொடர்பு சாதனம் உள்ளிட்ட பல்வேறு நவீன தளவாடங்களை இராணுவத்திடம் இந்திய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஒப்படைத்துள்ளார்.

இந்திய - சீன எல்லையில் பதற்றமான சூழல் நிலவும் நிலையில், அப்பகுதியில் இந்திய இராணுவம் நேற்று முன்தினம் தாக்குதல் ஒத்திகை நடத்தியது. லடாக்கில் எல்லைக்கட்டுப்பாட்டு கோடு அருகே அமைந்த பாங்காங் ஏரியில் பாதி இந்தியா வசமும், மீதி பகுதி சீன கட்டுப்பாட்டிலும் உள்ளது. இராணுவத்துக்கு புதிதாக வழங்கப்பட்ட இந்த நவீன தாக்குதல் படகில் ஒரே நேரத்தில் 35 வீரர்கள் பயணிக்கலாம். ஏரியின் எந்தப் பகுதியையும் துரிதமாக சென்றடையலாம். இதற்கான ஒத்திகையில் நேற்று முன்தினம் வீரர்கள் ஈடுபட்டனர்.

இதுதவிர, உள்நாட்டில் தயாரான ஆளில்லா ட்ரோன் விமானமும், போர் வாகனங்களும் இராணுவத்திடம் வழங்கப்பட்டன. எவ்இன்சாஸ் எனும் எதிர்கால தரைப்படை வீரர்களுக்கான அமைப்பை இராணுவத்திடம் அளிக்கும் நிகழ்ச்சியும் டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதன்படி ரஷ்யாவுடன் இணைந்து தயாரிக்கப்பட்ட ஏ.கே. - 203 ரக துப்பாக்கி, பொலிஸ்ரிக ரக தலைக்கவசம், அதிநவீன கண்ணாடி, துப்பாக்கி குண்டு துளைக்காத ஆடை வீரர்களுக்கு வழங்கப்படும்.

தலைக்கவசத்தில் 360 டிகிரி கோணத்தில் பார்க்கும் வசதி, இரவு நேரத்திலும் துல்லியமாக பார்க்க உதவும் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும் என பாதுகாப்புத்துறை குறிப்பிட்டுள்ளது.

லடாக்கிலுள்ள உலகின் மிகப்பெரிய போர்முனையான சியாச்சின் பனிப்பாறை அருகே பார்தாபூர் இராணுவ தளத்தில் ஒரு மெகாவோட் சூரியஒளி மின் உற்பத்தி நிலையமும் இராணுவம் வசம் ஒப்படைக்கப்பட்டது.

## இலங்கை மக்களுக்காக ரூ. 50 இலட்சம் நிதியுதவியளித்த பன்னீர்செல்வம்



இலங்கை மக்களுக்கு உதவுவதற்காக அ.தி.மு.க. முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வம் 50 இலட்சம் ரூபா வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக அவர், தமிழக நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்,

மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு தமிழக அரசு சார்பில் நிதியுதவி அளிக்கப்படுமென சட்டசபையில் முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்தார்.

அப்போது, என் குடும்பத்தின் சார்பில் 50 இலட்சம் ரூபா நிதியுதவி அளிக்கப்படுமென ஏப்ரல் 29ஆம் திகதி அறிவித்தேன். அதனடிப்படையில், என் மூத்த மகனும், எம்.பியுமான ரவீந்திர நாத் வங்கிக் கணக்கிலிருந்து 25 இலட்சம் ரூபா, என் இளைய மகன் ஜெயபிரதீப் கணக்கிலிருந்து 25 இலட்சம் ரூபாவுக்கான வரைவோலை அனுப்பியுள்ளேன். இதை பெற்றுக்'கொண்டதற்கான ஒப்புகைச் சீட்டை அளிக்கவும். - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை நிவாரண நிதியாக ரூ.10,000 வழங்கிய யாசகர்



தூத்துக்குடியைச் சேர்ந்த பூல்பாண்டியன் என்ற யாசகர், அப்பகுயிலுள்ள இருக்கன்குடி கோயில் திருவிழாவில் யாகசம் பெற்ற ரூ.10 ஆயிரத்தை இலங்கை நிவாரண நிதிக்காக விருதுநகர் கலெக்டரிடம் கொடுத்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் ஆலங்கிணறு கிராமத்தைச் சேர்ந்தவர் பூல்பாண்டியன் (வயது 72). இவர் தனது மனைவி இறந்த பின் யாசகம் எடுக்கத் தொடங்கியுள்ளார். யாசகம் எடுத்த பணத்தை கொரோனா, கல்வி உதவித் தொகை என இதுவரை ரூ. 5 இலட்சத்து 60 ஆயிரம் வரை நிதியுதவி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அ.தி.மு.க. பொதுக் குழு; இ.பி.எஸ். தெரிவு செல்லாது

### சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு



அ.தி.மு.க. பொதுக் குழுவை தனியாகக் கூட்டியதும் எடப்பாடி பழனிசாமியை இடைக்கால பொதுச் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டமையும் செல்லாதென சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த ஜூலை 11ஆம் திகதி இடம்பெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் அ.தி.மு.கவின் இடைக்கால பொதுச் செயலாளராக பழனிசாமி தெரிவுசெய்யப்பட்டார். தனி நீதிபதியின் இந்த உத்தரவை எதிர்த்து ஓ.பி.எஸ். தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேன்முறையீட்டு வழக்கில், இந்த வழக்கை மீண்டும் சென்னை உயர் நீதிமன்றமே விசாரித்து 2 வாரங்களில் தீர்வு காணவேண்டுமென உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டிருந்தது.

அதன்படி சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் வழக்கை விசாரித்தார். ஓ.பி.எஸ். மற்றும் இ.பி.எஸ். தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் ஆஜராகி கடந்த வாரம் 2 நாட்களாக விசாரணை நடைபெற்றது.

இந்த வழக்கை 2 வாரங்களில் விசாரித்து முடிக்கவேண்டுமென உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், 2 நாட்களில் விசாரணையை முடித்துக்கொண்ட நீதிபதி, தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் தள்ளி வைத்திருந்தார். இந்நிலையில், இந்த வழக்கில் நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் நேற்றுக் காலை தீர்ப்பு வழங்கினார்.

அந்தத் தீர்ப்பில், ''அ.தி.மு.கவில் ஜூன் 23ஆம் திகதிக்கு முன் இருந்த நிலைதான் நீடிக்கும். ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். இணைந்துதான் பொதுக் குழுக் கூட்டத்தை நடத்தவேண்டும். பொதுக்குழுவைக் கூட்ட ஆணையரை நியமிக்க வேண்டும்'' - என்று உத்தரவிட்டார்.

இதன்படி எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட அ.தி.மு.க. பொதுக் குழு முடிவு செல்லாது என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனால், அந்தப் பொதுக் குழுவில் புதிதாக உருவாக்கப்பட்ட அனைத்து பதவிகளும் செல்லாது என்ற நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில், சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.